விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 27 திங்கட்கிழமை (11.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 23

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO



## தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படும்

### ஜனாதிபதி மகிந்த தமிழில் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான, நீதியான அரசியல் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார். நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துரையப்பா விளையாட்டரங்கில் மக்கள் மத்தியில் தமிழில் (16ஆம் பக்கம் பார்க்க)

## வேலுப்பிள்ளையின் உடல் தீயுடன் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் உடல் நேற்று வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் தீயுடன் சங்கமமானது. இறுதிக் கிரியைகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இறுதி வணக்க நிகழ்வில் (16ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் அறிவிப்புக்காக காத்திருந்த மக்கள் ஏமாற்றம்

## உயர் பாதுகாப்பு வலயம் குறித்து எந்த அறிவிப்பும் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயர் பாதுகாப்பு வலய பிரகடனங்களை விலக்குதல், கைது செய்யப்பட்டவர்களை விடுவித்தல் உட்பட எந்தவித முடிவுகளையும் அறிவிக்கவில்லை. அவரின் அறிவிப்புக்களுக்காக எதிர்பார்த்துக் காத்திருந்த யாழ்ப்பாண மக்கள் இதனால் ஏமாற்றம் அடைந்தனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச யுத்த குற்ற நீதிமன்றத்தில் ஆஜராக ஜனாதிபதி மகிந்த திட்டம்?

(கொழும்பு)

யுத்த குற்றம் தொடர்பில் பதிலளித்து சர்வதேசத்தின் மத்தியில் ஆஜராகி சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளை கவர ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு கடிதம் ஒன்றை பெறுவதற்காக முன்னாள் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன கடும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். யுத்தக் குற்றம் தொடர்பில் சர்வதேசம் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## பகிரங்க விவாதம் நடத்த பொன்சேகா மீண்டும் அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பகிரங்க விவாதமொன்றை நடத்தத் தயார் என எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா மீண்டும் அறிவித்துள்ளதாக ஜே.வி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் விவகாரம் தொடர்பில் பகிரங்க விவாதமொன்றை நடத்த தமது ஜனாதிபதி வேட்பாளர் தயார் என ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் இராணுவத் தளபதி மற்றும் பாதுகாப்பு (16ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்குப் பகுதிக்குச் சென்று சொந்த இடங்களை பார்வையிட 4 மணிவரை காத்திருந்த மக்கள்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு வலயத்திலுள்ள தமது வீடுகளை பார்வையிடுவதற்காக மாலை 4 மணியளவில் தெல்லிப்பழையில் நேற்று காத்திருந்த மக்கள் ஏமாற்றம் அடைந்தனர். யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயர் பாதுகாப்பு வலயப்பகுதியை அகற்றும் அறிவிப்பை வெளியிடுவார் என அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தெல்லிப்பழையில் வைத்து (16ஆம் பக்கம் பார்க்க)


## மேலும் நான்கு கைதிகள் யாழ்.வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

தமது விடுதலையினை வலியுறுத்தி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மேற்கொண்டுவரும் உண்ணாவிரதத்தில் நான்கு கைதிகள் நேற்று மயக்கம் முற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே (16ஆம் பக்கம் பார்க்க)





ஜனாதிபதியின் யாழ். விஜயத்தின்போது...

# ஆறுமாத காலத்துக்குள் அரசியல் தீர்வு இல்லாவிட்டால் சாத்வீகப் போராட்டம்

## இலங்கை தமிழரசுக்கட்சி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிபடைந்து 6 மாத காலத்திற்குள் தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கும், விடுதலைக்குமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும். அவ்வாறு குறித்த காலத்துக்குள் தீர்வு எட்டப்படாவிட்டால் அவ் இலக்குகளை அடைவதற்கு மக்களை அணி திரட்டி ஜனநாயக மற்றும் சாத்வீக வழிமுறைகளில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என இலங்கை தமிழரசுக்கட்சி அறிவித்துள்ளது. தமிழரசுக்கட்சியின் வருடாந்த தேசிய மாநாட்டில் நேற்று 12 பொதுத் தீர்மானங்கள் கொண்ட அறிக்கை ஒன்றுவெளியிடப்பட்டது. அதிலேயே மேற்படி விடயம்தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது, (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை அணியை இலகுவாக வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு நுழைந்தது இந்தியா

காம்பீர்,ஹோலியின் சிறப்பான துடுப்பாட் டத்தின் மூலம் இந்திய அணி 8விக்கெட்டுக்கள் வித்தியா சத்தில் இலங்கை அணியை இலகுவாக வீழ்த்தியது.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி முத்தரப்பு தொடரில் இரண்டாவது அணியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. பங்களாதேஷ், இலங்கை மற்றும் இந்திய அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் தொடர் பங்களாதேஷில் நடைபெறுகிறது.

இத் தொடரில் நேற்று நடைபெற்ற 5 ஆவது போட் டியில் இலங்கை,இந்திய அணிகள் மோதின.இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி முன் னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 46.1ஓவர்க ளில் 214 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களை யுமிழந்தது.

இதில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 68ஓட் டங்களையும்,ராண்டீவ் 56ஓட்டங்க ளையும்,டில்சான் 33, துஷார 28ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச் சில் சகீர்கான், அமித் மிர்ஷா ஆகி யோர் தலா 3விக்கெட் டுக் களையும், தியாகி, சிறிசாந்த் மற்றும் யுவராஜ் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை நோக்கி துடுப்பெ டுத்தாடிய இந்திய அணி காம்பீர், ஹோலியின் சிறப் பான ஆட்டத்தின் மூலம் 32.4ஓவர்களில் 2விக்கெட் டுக்களை மாத்திர மிழந்து 214ஓட்டங்களைக் குவித்து 8விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதில் விராட் ஹோலி ஆட்டமிழக்காமல் 68பந்துகளில் (9பவுண்ட ரிகள் உட்பட) 71 ஓட்டங்களையும், காம்பீர் 86பந்துக ளில் (10 பவுண்டரிகள் உட்பட) 71ஓட்டங்களையும், தினேஷ் கார்த்திக் 40பந்துகளில் (9 பவுண்டரிகள் உட்பட) 48ஓட்டங்களையும் எடுத்தனர்.பந்துவீச்சில் துஷார,பெரேரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு வழியமைத்த சகீர்கான் ஆட்ட நாயகனாகத் தெரிவா னார்.இவ் வெற்றி மூலம் இந்திய அணி தொடரில் 8புள்ளியை பெற்று இரண்டாவது அணி யாக இறுதிப் போட்டிக்கு தெரிவானது.இதன் மூலம் முத்தரப்பு தொடரின் இறுதிப் போர்ட்டியில் நாளை மறு தினம் இலங்கை -இந்திய அணியினர் மோதுகின்றன.

# ஆறுமாத காலத்துக்குள் அரசியல் தீர்வு...

**பொருளாதார தீர்மானம்**

கடந்த முப்பது ஆண்டு காலமாக இடம் பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக சிதைந்து, சின்னாபின்னப்பட்டு, சீரழிந்து நிற்கும் வடக்கு- கிழக்கு பிரதேச உட்கட்டுமா னங்களை மீள் வித்து,வாழ்வாதாரங்களை தொலைத் துவிட்டு நிற்கும் வன்னி மக்கள் உள்ளிட்ட சகல மக்களது வாழ்வாதாரங் களை மீள்வித்து,

எமது பிரதேசத்து உற்பத்தி வளங்களை இனங் கண்டு தொழில் முயற்சிகளை ஆரம் பிப்பதற்கான ஆய்வு நடவடிக்கைகளை மேற் கொண்டு எமது மக்களின் பொருளாதார மேம் பாட்டிற்கும், வேலை வாய்ப்பு உருவாக்குதலுக் கும் உழைத்தலும்,இந்த செயற்பாடுகளைத் திட்டமிடவும்,அமுலாக்கவும், கண் காணிக்கவும் கூடிய நிபுணத்துவ தகைமை பெற்றவர் களின் சேவைகளை அணிதிரட்டி நடவடிக்கை எடுக் கவும்,

உள்ளூர் மற்றும் புலம் பெயர் தமிழ் முதலீட்டா ளர்களை ஊக்குவித்து தொழில்துறை மேம்பாட்டிற் காக உழைக்கவும், இழந்தவற்றை மீள்வித்து அபிவி ருத்திப் பாதையில் முன் செல்லவும் அவற்றிற்காக அரச சார்பற்ற நிறுவனங்களதும் சர்வதேச சமூகத் தினதும் ஒத்து ழைப்பை பெறவும்,காத்திரமானநடவடிக்கை களை இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்கொள்ள வேண் டும் என இச்சபை தீர்மானிக்கிறது.

**அரசியல் பிரேரணை**

தமிழ்த் தேசிய இனத்தின் நியாயபூர்வ மான அபிலா ஷைகளை உள்வாங்கிக் கொள்ளும் அரசியல் யாப்பு இந்நாடு சுதந்திரமடைந்த காலத்திலோ அன்றிப் பின்னரோ நடை முறை யில் இருக்கவில்லை.இதனால் இனப்பிரச் சினை தீர்க்கப்படாத ஒன்றாகவே இன்றை வரை நிலவு கிறது.மாறிமாறி வந்த அரசுகள் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்களின் நியாயபூர் வமான கோரிக்கைகள் பற்றிப் பிரஸ்தாபித்தது மட்டுமன்றித் தமிழ்த் தரப்புடன் ஒப்பந்தங்களையும் செய்து கொண்டா லும்கூட இவை யாவும் செயல் வடிவம் பெற வில்லை.

இதனால் தமிழர் தரப்பின் அரசியல் போராட்டம் சாத்வீக ரீதியிலும் ஆயுதப் போராட்ட ரீதியிலும் முன்னெடுக்கப்பட்டது. ஆயுதப் போராட்டம் முடிப டைந்த இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர மான அரசியல் தீர்வு காண்பது காலத்தின் கட் டாயமாகிறது.இத்தகைய தீர்வும் தமிழ் மக்கள் காலாகாலமாக முன்வைத்த தமது அபிலாஷை களான தாயகம், தேசிய சுயநிர்ணய உரிமை கள் அடிப்படையில், எம்மக்களிடமுள்ள இறைமை அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் தன் நாட்டு உரிமையை உறுதிப்படுத் தும் வகையில் இருத்தல்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் முற்றாக நீக் கப்பட வேண்டும்.இரு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ்த் தேசிய இன மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்ப டாமை யால் ஏற்பட்டிருந்த போராட்டங்களினாலும் ஆயுதப் போரினாலும் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாய் அலைகின்ற னர்.

தமிழர் தாயகப் பிரதேசங்கள்,கடல் பிர தேசங்கள் அரச இராணுவப் படைகளினால் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்ப டுத்தப்பட்டுள்ளது.

போர் முடிபுக்கு வந்து விட்டதாக அரசு அறி வித்து விட்டது.எனவே உயர் பாதுகாப்பு வலயங் கள் உடனடி யாக நீக்கப்பட்டு மக்கள் தங்கள் சொந்த வீடுகளில் குடி யேற அனுமதிக்கப்பட வேண்டும்.அந்த மக்களுக்கு வாழ்வாதா ரங்கள் வழங்கி வீடுகள் கட்டித் தரப்பட வேண் டும்.

தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்து கேந் திர முக்கியத்துவம்வாய்ந்தஒருசில இடங்களைத்தவிர ஏனைய ஆயுதப் படைமுகாம்களும், ஆயு தப்படையினரும் விலக்கப்பட்டு தமிழர் தாயக மக்களின் சுதந்திரமான நடமாட்டம் அரசு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் குறிப்பாக ஜனநாயக அடிப்படை உரிமைகள்,மனித உரிமைகள், மக்கள் உயிர்வாழும் உரிமை பாதுக்காக்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

அரசியல் காரணங்களுக்காகவும் காட்டிக் கொடுப் புகளினாலும் வெறும் சந்தேகத்தினாலும் கைது செய் யப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலா கவும் கூட விசார ணையின்றி தடுப்புக் காவலில் உள்ள சிறைக்கைதிகள் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அவர்கள் உடன் விடுவிக்கப்பட வேண்டும் என அரசா ங்கத்தை வற்புறுத்தி கேட்கிறது.

போர் முடிபுற்ற நிலையில் அரசிடம் சரண டைந்த 12 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர் களின் பேர் விபரங்களை உடன் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும், அவர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்பதுடன் அவர்கள் புனர் வாழ்வுக்காகவும் புதிய வாழ்க்கையின் பொருட்டும் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட வேண்டும்.

போரில் கொல்லப்பட்டவர்களின் விபரங் கள் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு கொல்லப் பட்டவர்களின் குடும்பங்களுக்கு போதிய நட்ட ஈடு வழங் கப்படுதலும் வேண் டும் எனவும் அழிக்கப்பட்ட மக்களின் உடைமை கள் மதிப்பிடப்பட்டு அவற்றிற்கும் நட்ட ஈடு வழங் கப்படவேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

தமிழர் தாயக பிரதேசங்களில் இந்துக் கோவில்கள் சூறையாடப்பட்டு பௌத்த சின்னங் கள் நிலைநாட்டப்படும் நடவடிக்கைகள் இடம் பெறுவதாலும் தமிழ் பேசும் மக்க ளின் வாழ் விடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு தமிழ் பேசும் மக்களின் மொழி, கலை, கலாசாரங்கள் சீர் குலைக் கப்பட்டு தமிழ் பேசும் மக்களின் வாழ் விடங்கள் பௌத்த சிங்கள மயமாக்கப்பட்டு வருவதாக தமிழர் தாயக பிரதேசங்களில் பெரும் நிலப்பரப்புக்கள் ஆக்கிரமிக்கப்பட்டு ஆயுதப்படைகளின் கட்டுமானங் கள் ஆரம் பிக்கப்பட்டு வருவதாலும் தமிழ் பேசும் மக்க ளின் பெரும்பான்மைத்துவம் வீழ்த்தப்பட்டும் பலவீ னப்படுத்தப்படும் வகையில் பிரதேச மற்றும் இனக் கட்டமைப்பை மாற்றி அமைப் பதற்கு நடவடிக்கைகள் அரசின் நேரடியான மறைமுகமான இத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தை உடன் தடுத்து நிறுத்ததக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்குறித்த தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கும் தேவைப்பட் டால் போராட்ட நடவடிக்கைகளை முன் னெடுப்பதற் கும் தீர்மானங்களின் அடிப்படை யிலும் கொள்கை அடிப்படையிலும் அணிதிர ளக்கூடிய தமிழ், முஸ்லிம் மக்களின் அனைத்து ஜனநாயக சக்திகளையும் கட்சிகளையும் ஒரு ங்கிணைத்து செயலாற்ற வேண்டும் என்றும் புலம்பெயர்ந்த தமிழர் தாயக மக்களின் அமைப் புகளையும் கூட்டிணைக்க வேண்டுவதுடன் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமுகத்திடமும் நாடுகளிடமும் ஐ.நா அமைப்புகளிலும் இரா ஜதந்திர ரீதியில் ஆதர வினைத் திரட்டுவதற்கு பொருத்தமான தக்க நிபுணத் துவம் ஆற்றல் அனுபவம் மிக்கவர்களையும் ஈர்த்து தமிழ் பேசும் மக்களின் விடிவையும் விடுதலையை யும் ஈட்டுவதற்கு உறுதிபூண வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளு மன்ற தேர் தல்கள் முடிபடைந்த 6 மாத காலத்துள் மேற்குறித்த தீர்மானங்களில் அடிப்படையில் தமிழ் மக்களின் உடனடித் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என் பதுடன் தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கும் விடுதலை க்குமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

அவ்வாறு குறித்த காலத்துள் தீர்வுகள் எட் டப்படாது விட்டால் சிறப்புத் தேசிய மாநாட்டைக் கூட்டி அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பதுடன் அவ் இலக்குகளை அடைவ தற்கு மக்களை அணி திரட்டும் பொருட்டு ஜனநாயக மற்றும் சாத்வீக வழிமுறைகளில் போராட்டங்களை முன்னெ டுக்க வேண்டும்.

போரினால் பேரவலத்தில் வீழ்ந்து கிடக்கி ன்ற தமிழ் பேசும் மக்களினதும் தாயக பிரதே சங்களிலும் பொருளாதார கட்டமைப்புகளை உருவாக்கவும் விரு த்தி செய்யவும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடுகளை எட்ட வேண் டும் என் றும் சமகல்வி, சமவேலைவாய்ப்பு எனும் திட்ட ங்களை உருவாக்கவும் மேம்படுத்தவும் பொருத்த மான நிபுணத்துவத்தை ஈர்க்க வேண்டும் என்பதுடன் மனித வளம் ஆற்றல் கடின உழைப்பு மிகுந்த எம் மக்க ளிடம் வேலை வாய்ப்பினை உருவாக்கவும் தொழில் நுட்பத்தை பெருக்கவும் பொருத்தமான சிறு மற்றும் பெரும் தொழில்களை தமிழ் பேசும் மக்க ளின் பிரதே சத்தில் உருவாக்குவதற்கும் தேசிய மட்டத்தில் வேலை வாய்ப்புக்களை பெறவும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இம் மாநாடு தீர்மானிக்கிறது என்றுள் ளது. (ச-7)

## எச்.என்.டி.சி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா கற்கை நெறியினை 1993ஆம் ஆண்டிலி ருந்து இன்று வரை கற்று இதுவரை இறுதி பரீட்சைக்கு தோற்றாத,சித்தியடைய தவறிய மாணவர்களும் மற்றும் நிறுவனத்தில் கற்கை நெறியினை தொடர்ந்து பரீட்சைக்கு தோற்ற முடியாது இருந்து,தற்போது புதிதாக விடுவிக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் இருந்து வருகை தந்து பரீட்சை க்கு தோற்ற வேண்டிய மாணவர்கள் அனைவரும் நாளை செவ் வாய்க் கிழமை க்கு முன்னர் நிறுவனத்திற்கு சமுகமளித்து தமது விபரங் களை பதிவு செய்து கொள் ளுமாறு யாழ்ப் பாண உயர் தொழில்நுட்ப வியல் நிறுவன பழைய மாண வர் சங்க செய லாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப் பதிவு தமக்கு வழங் கப்படும் இறுதி சந்தர்ப்பம் என் பதனை கவன த்தில் கொள்ள வும்.

இ


### 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
26
03
1947

மறைவு
11
12
2009

### அமரர் முத்தையா யோகராசா

(ஓய்வு பெற்ற கிளை முகாமையாளர் ப.நோ.கூ.ச)

தந்தையே உமை இழந்து முப்பது
நாள்கள் சென்றால் என்ன
உயிர் உள்ள வரை உமை மறவோம்.

எமது தந்தையின் மரணச் செய்தி அறிந்து
நேரிலும் தொலைபேசி மூலமும்
ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது
மனப்பூர்வமான நன்றிகள்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்

(335)



### முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
31
01
1914

மறைவு
23
12
2008



அமரர்
### விசாலாட்சி சின்னத்துரை (சாம்பசிவம்)
திதி:அபர துவாதசி

வித்தாகி செடியாகி பெரு விருட்சமாகி எமை
விரிகிளையால் நிழல் விரித்து என்றும் காக்கும்
சித்தத்தில் நிறைந்திருக்கும் சிவமாகிய தாயே
சிரம் தாழ்த்தி வணங்குகிறோம் விசாலாட்சி தாயே

கே.வி.கே. அரிசி ஆலை
உடுப்பிட்டி

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-4183)

# இன்று ஒரு தகவல்

## அர்த்தமில்லாத சண்டைகள்

கணவன் – மனைவி அன்பாக இருக்க வேண்டும். ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும்.

அதுதான் நல்ல குடும்பம்.

இன்று பல குடும்பங்களில் அர்த்தமில்லாத சண்டைகள் தான் அதிகம்.

கிராமப்புறங்களில் வேடிக்கையாக ஒரு கதை செல்லுவார்கள்.

ஒரு ஊரில் ஒரு ஆள் இருந்தான். வேலை வெட்டி இல்லாமல் சும்மாவே இருந்தான். அவனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்தார்கள். மனைவி வந்து சேர்ந்தாள்.

''சும்மாவே உட்கார்ந்திருக்கிறியே... ஏதாவது சம்பாதிக்கிற வழியைப்பார்'' என்றாள்.

''அதற்குத்தான் யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறேன். ஒரு அருமையான ஐடியா!'' என்றான்.

''என்ன அது... சொல்லுங்க...'' என்றாள் ஆவலோடு.

''ஒரு ஆட்டிக்குட்டி வாங்கப் போகிறேன்.'' என்றான்.

''அதை வாங்கி என்ன செய்யப் போறீங்க...'' என்றாள்.

''அந்தக் குட்டி வளரும் – பெரிதாகும்... அதன் பின் நிறையக் குட்டிகள் போடும்.''

''சரி, அதற்குப்பின்...''

''அதையெல்லாம் சந்தையில் கொண்டுபோய் வித்துப் போட்டு... அந்தக்காசுக்கு ஒரு எருமைமாடு வாங்குவேன்.''

''அது எதற்கு?''

''எருமை மாடு நிறைய பால் கொடுக்கும். அதைக் கொண்டுபோய் பால்பண்ணையில் கொடுப்பேன் அல்லது நானே விற்பேன்... கை நிறையக் காசு கிடைக்கும். அதற்குப் பின் ஒரு பசுமாடு வாங்குவேன்... பாலையும் விற்கலாம். நாமும் காப்பிபோட்டுக் குடிக்கலாம்.''

''அடுத்த தெருவில இருக்கிற எங்க அம்மா வீட்டுக்கும் கொஞ்சம் பால் கொடுத்தனுப்பலாம்'' என்றாள் மனைவி.

இந்த இடத்தில் கணவனுக்கு கோபம் வந்து விட்டது.

''அது எப்படி... உங்க அம்மாவீட்டுக்கு எதுக்குக் கொடுக்கணும்? அதெல்லாம் முடியாது'' என்றான்.

இந்த இடத்தில் சண்டை ஆரம்பமாகிவிட்டது.

கொஞ்ச நேரத்தில் இரண்டு பேரும் சத்தம் போட ஆரம்பித்தார்கள்.

கடுமையாக சண்டை நடப்பதை அறிந்து பக்கத்து வீட்டுக்காரன் ஓடிவந்தான்.

அவனுக்குத் தெரியும்... வாங்காத மாட்டுக்காக இப்படிச் சண்டை போட்டுக் கொள்கிறார்கள் என்று.

அவன் ஓடி வந்து சொன்னான்.

''ஏண்டா... உன்னுடைய பசுமாட்டை ஒழுங்காகக் கட்டிப்போடக்கூடாதா?'' என்றான்.

''என்னடா சொல்கிறாய்?'' என்றான் இவன்.

''உன் மாடு என் தோட்டத்தில் வந்து மேய்ந்து விட்டது. பயிரெல்லாம் நாசமாகிவிட்டது. பத்தாயிரம் ரூபாய் அளவுக்குச் சேதம்...

அதை வாங்கிவிட்டுப் போறத்துக்குத்தான் வந்தேன். பத்தாயிரம் ரூபா கொடு'' என்றான்.

இவன் அரண்டு போனான். அதன் பின் சொன்னான்.

''டேய்... நான் இன்னும் மாடே வாங்கவில்லையே... அதற்குள் அது வந்து எப்படி உன் தோட்டத்தில் மேயும்? என்னடா உளறுகிறாய்?'' என்றான்.

''நீதான் இப்ப உளறிக்கொண்டிருக்கிறாய். மாடே வாங்கவில்லை. அதற்குள் எப்படி உன் மனைவி அவளுடைய அம்மா வீட்டுக்குப் பால் கொடுத்தனுப்ப முடியும்?'' என்றான் அவன்.

நம்ம ஆளுக்கு இப்பத்தான் புத்தி வந்தது.

அர்த்தமேயில்லாமல் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறோமே என்பதை உணர்ந்தான்.

இது நம் முன்னோர்கள் சொல்லும் கதை.

சண்டையில் தான் அர்த்தமில்லையே தவிர கதையில் அர்த்தம் உண்டு.

இல்லாத விடயங்களுக்காக சண்டை போட்டுக் கொண்டு இல்லறத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிற மனிதர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள்.

ஒருத்தன் தன் மனைவியைப் பற்றி மாமனாரிடம் புகார் சொன்னானாம்.


''மாமா உங்க பொண்ணு அர்த்தமில்லாமல் சண்டை போடுறா எதற்கெடுத்தாலும் எடுத்தெறிஞ்சு பேசுறா?''

''நீங்க எப்படி மாப்பிள்ளை சமாளிக்கிறீங்க?''

''அவ எடுத்தெறியிறது என் மேல படாமல் ஒதுங்கி நின்று கொள்வேன்.''

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*





தென்மராட்சி பிரதேச பெண்கள் அதிகாரசபையும் தென்மராட்சி பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மாதர்களால் உருவாக்கப்பட்ட உள்ளூர் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சி நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி இ.லோஜினி மற்றும் பிரதேச பெண்கள் அதிகாரசபை செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன் ஆகியோர் நிற்பதையும், சாவகச்சேரி நகர் கிராம உத்தியோகத்தர் ப.சிவசரவணநாதன், மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், அருகில் பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி நிருபர்)

### கொழும்பு பங்குச் சந்தை

# தனது கிளை அலுவலகத்தை யாழில் ஆரம்பிக்கவுள்ளது

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தை தனது கிளை அலுவலகம் ஒன்றினை எதிர் வரும் பெப்ரவரி மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக அந்நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ்ப்பாண மக்களின் தனி நபர் வருமானம் உயர்வாகவுள்ளது. அவர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலையிலும் உள்ளனர். வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து தாரளமாக நிதி உதவி பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாலும் அவர்கள் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய ஆர்வம் கொண்டுள்ளனர் எனப் பங்குதாரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவுகளிலும் போர் நெருக்கடிகள் மத்தியிலும் கொழும்பு பங்குச் சந்தை சிறப்பான முன்னேற்றகரமான செயற்பாடுகளை கொண்டிருந்தது என அதன் தலைவர் நிகால் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

### ஏகாதசி உற்சவம்

கோண்டாவில் கிழக்கு அருள் மிகு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை தேய்பிறை ஏகாதசி உற்சவம் இடம் பெறவுள்ளது.

இவ் உற்சவம் மாலை 3.30 மணிக்கு சங்கல்பத்துடன் ஆரம்பமாகி ஆபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று ஸ்ரீதேவி பூதேவி சமேதராக வல்லிபுரநாதர் உள்வீதி வலம் வரும் காட்சி இடம்பெறவுள்ளது. (6-4-36)

# தனியார் துறையையும் பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ஜனாதிபதி

(கொழும்பு)

அரச துறையைப் போன்று தனியார் துறையையும் பராமரிப்பதற்கான நடவடிக்கைகளும் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் வர்த்தகப் பிரமுகர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், அரச துறைகள் அனைத்தும் சிறந்த பராமரிப்பிலுள்ளன. இதைப் போன்று தனியார் துறைகளின் பராமரிப்புகளும் எதிர்காலத்தில் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படும்.

இன்று நாடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அபிவிருத்திப் பாதையில் இந்நாட்டைத் தொடர்ந்தும் முன்னேற்றிச் செல்வதே எமது நோக்கமாகும்.

அதற்கான ஏற்பாடுகளையும் பல திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

இச்சந்திப்பின்போது வர்த்தகப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (2-6)

## இராசி பலன்

11-01-2010
(மார்கழி 27 திங்கட்கிழமை)
ஏகாதசி முற்பகல் 8.12 மணிவரை
அனுசம் முன்னிரவு 11.09 மணிவரை
இராகுகாலம் 8.03-9.33 மணிவரை
சுபநேரம் 12.33- 2.03 மணிவரை
கெற்போட்ட முடிபு, ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத பகை, காரியதாமதம், போசனசுகம், புத்தி சாதுரியம். |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, தொழில்நன்மை. |
| மிதுனம் | தொழிலில் ஆர்வம், முயற்சி கைகூடும், நல்ல செய்தி, உடல் நலம். |
| கடகம் | வியாபார விருத்தி, உறவினர் சந்திப்பு, தன்னம்பிக்கைக் குறைவு, தனவிரயம். |
| சிங்கம் | மாதாசுகம், தொழிலில் ஆர்வம், ஆரோக்கியக் குறைவு, போசன சுகம். |
| கன்னி | எடுத்த காரியம் கைகூடும், பிரயாண நன்மை, தனவருவாய், நற்பெயர். |
| துலாம் | பெரியோர் உதவி, காரிய தாமதம், தனவிரயம், கோபப் படுதல். |
| விருச்சிகம் | பாராட்டு, நல்ல முயற்சி, போசனசுகம், நல்ல செய்தி. |
| தனுசு | சிந்தனை மிகுதி, காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, சுபசெலவு. |
| மகரம் | பொருள்சேர்க்கை, முயற்சி கைகூடும், பெருமையடைதல், குடும்ப மகிழ்ச்சி. |
| கும்பம் | தூரதேசச் செய்தி, அதிக பிரயாசை, விருந்துபசாரம், நண்பர்கள் உதவி. |
| மீனம் | எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு, பயணம், இடமாற்றம் |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 240 | 250 | 250 |
| தக்காளி | 120 | 130 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 50 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 130 | 140 | 150 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 95 | 100 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 200 | 220 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 90 | 75 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 110 | 120 | 160 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | 180 | 200 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 140 | 150 | 130 |
| கத்தரி தம்புள்ள | 110 | 120 | 130 |
| கீரை – 1 பிடி | 30 | 35 | 40 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 35 |

## கால்கோள் விழா

(சாவகச்சேரி)

மீசாலை விக்னேஸ்வரா வித்தியால யத்தின் கால்கோள்விழா இன்று திங்கட் கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென் மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் என்.மனோ ரஞ்சிதன் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து கௌரவ விருந்தினராக பாட சாலையின் நலன்விரும்பி பே. சந்திரகாயன் கலந்துகொள்ளவுள்ளதுடன் ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை இம் மாணவர்களுக்கு வழங்கவுள்ளார்.(4-29)

## டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க உடுவில் பிரிவினர் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக பல்வேறு செயற்திட்டங் களை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பிரிவினரால் டெங்கு ஒழிப்பு தொடர் பான கருத்தரங்குகள், சிரமதானப் பணிகள், பாடசாலைகள் மற்றும் வீடு வீடாகச் சென்று விளக்கமளித்தல் போன்ற செயற்பாடுகள் தாவடியிலிருந்து குப்பிளான் வரையான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (6-30)

## சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு காந்திஜீ சனசமூக நிலைய சமூகம் சார்ந்த 13 பேருக்கு சுய தொழில் முயற்சிக்கான கடன் இலங்கை வங்கி சுன்னாகம் கிளையினால் வழங்கப் பட்டுள்ளது.

இதனையடுத்து கடன் பெற்றவர்கள் சுய தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (6-134)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த யாழ்.மாநகர சபையின் விசேட ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக யாழ்ப்பாண வணிகர் கழக நிர்வாகத்தின ருடன் மாநகர முதல்வர் ஆணையாளர் மற்றும் உயரதிகாரிகள் கடந்த வெள்ளிக் கிழமை நடத்திய கலந்துரையாடலினை அடுத்து நகரின் மையப்பகுதியில் தினமும் காலையும் மாலையும் கழிவகற்றும் பணி மாநகரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது டெங்குநோயைக் கட்டுப் படுத்தும் விசேட ஏற்பாடாக பின்வரும் வீதி களில் அமைந்திருக்கும் வர்த்தக நிறுவனங் களினால் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் கழிவுகளை அகற்றுவதற்கென கால அட்ட வணை மாநகரசபையினால் வெளியிடப் பட்டுள்ளது.

இதன்பிரகாரம் ஸ்ரான்லி வீதி, கஸ்தூரி யார் வீதியில் பிற்பகல் 5 மணிக்கும் மின்சார நிலைய வீதி மற்றும் காங்கேசன்துறை வீதி யில் பிற்பகல் 6 மணிக்கும் ஆஸ்பத்திரி வீதி மற்றும் கந்தப்பசேகரம் வீதியில் பிற்பகல் 6.30 மணிக்கும் கழிவகற்றும் செயற்பாடு கள் மேற்கொள்ளப்படும் எனவும் அதற்கு மாநகர நிர்வாகம் உரியநேரத்தில் இச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உறுதி யளித்துள்ளதாகவும் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித் துள்ளார். (6-4)

## சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தினம்

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தின நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/கனகரட் ணம் மகாவித்தியாலயத்தில் அதிபர் வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் "சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்" என்னும் விடயம் பற்றி பருத் தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச் சிரம சுவாமி சித்ரூபானந்தா கருத்தரங்கு நிகழ்த்தவுள்ளார். இதில் க.பொ.த. உயர்தர மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.(6-4)




## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு அருள்மிகு மீனாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 2ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை இரதோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

மேலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன தேசிய சேவையில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 10 மணி முதல் 10.30 மணிவரை ஊரெழு மீனாட்சி அம் பாள் திருவூஞ்சல் பாடல்கள் ஒலிபரப்பாகவுள் ளதாக அகில இலங்கை இந்துமாமன்ற தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (6-4)

## வேகமாக பரவிவரும் பாதீனியம் களை

கோண்டாவிலின் அனைத்துப்பகுதிகளி லும் மீண்டும் பாதீனியம் பரவியுள்ளது. ஆரம்பத்தில் ஒரு சில இடங்களில் மட்டும் காணப்பட்ட களையானது கடந்த பருவப் பெயர்ச்சி மழை காரணமாக விவசாய, தரிசு, குடியிருப்பு காணிகளில் வேகமாக பரவி வளர்ச்சியடைந்துள்ளது.பாதீனியத்தின் பரம் பலால் மண்வளம் குன்றுவதுடன் விவசாய, கால் நடைவிளைச்சலும் குறைவடையும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (6-36)




# சுவர் இடிந்து வீழ்ந்ததில் இளம் குடும்பஸ்தர் பலி

(சாவகச்சேரி)


நுணாவில் மேற்கில் வீடு உடைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது தலையின் மீது சுவரிடிந்து வீழ்ந்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மரணமானார்.

சாவகச்சேரி சிவன் கோயிலடியைச்சேர்ந் இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் செல்வகுமார் (வயது -28) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவரா வார்.

இவர் வன்னியின் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமிலிருந்து அண்மையி லேயே குடும்பமாக வந்து குடியமர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது . (2-29)









இலங்கை தமிழரசுக் கட்சியின் வருடாந்த தேசிய மாநாட்டில் கட்சிக்கொடி, மங்கல விளக்கை நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஏற்றி வைப்பதையும் அவர் கௌரவிக்கப்படுவதையும் முதல் உள்ள படங்களிலும் தமிழரசுக்கட்சியின் பவளவிழா மலரை வெளியிட்டு வைப்பதை யும் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினரையும் அடுத்துள்ள படங்களிலும் நிகழ்வில் உரையாற் றிய கட்சிப்பிர முகர்களை மற்றைய படங்களிலும் காணலாம்.

படங்கள்:- அலுவல செய்தியாளர்

# விஜயநகரக் காலச் சிற்பக்கலை

ஸ்ரீசைலம்



அவற்றுள் சில ,

1. சக வருடம் 1315இல் (கி.பி. 1393) இரண்டாம் ஹரிஹரராயர் காஞ்சி காமாஷி அம்மன் கோயிலுக்குத் தாமிர நிலைக் கதவு வழங்கினார். (EI-III, No.32,p.230)

2. சக வருடம் 1334இல் (கி.பி. 1412) அரிஹரராய உடையார் என்பவர் பவானி வட்டத்திலே பரிபாலகராக விளங்கிய காலத்தில் திருவரங்கநாதர் கோயிலுக்குத் தானங்கள் வழங்கினார். அமுது, கற்பூர ஆராதனை, நந்தாவிளக்கு, சந்தனக் காப்பு, மலர் மாலைகள், நறும்புகை, வெற்றிலை, பாக்கு ஆகியவற்றை இடுவதற்கென்று அறக்கட்டளை செய்தார். மேலும், நந்தவனம் ஒன்று இடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கே அன்னதானம் வழங்குவதற்கென்று அரிசி, பருப்பு, நெய், காய்கறி, மோர், வெற்றிலை, பாக்கு ஆகியவற்றைக் கிகரமாகக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. (EI-XVI,No.15,p.226)

3.இரண்டாம் தேவராயனின் திருவரங்கச் செப்பேடுகள் கி.பி. 1428இல் அரங்கனுக்கு 12 நந்தா விளக்குகளும் மாலைகளும் வழங்கியமை பற்றித் தெரிவிக்கின்றன. (EI-VVII,No.9,p.117)

4.மல்லிகார்ச்சுனனின் திருவரங்கச் செப்பேடுகள் கி.பி. 1426 இல் அரங்கனுக்கு நித்திய அன்னமும், தாம்பூலமும், மாலையும் வழங்கி சமபந்தி நிறுவித் தானஞ் செய்யப்பட்ட பொருட்களின் பட்டியலையும் குறிப்பிடுகின்றன.(EI-XVI.No.28pp.352-3)

5.இரண்டாம் விரூபாசஷனின் ஸ்ரீசைலம் செப்பேடுகள் கி.பி. 1466 இல் நித்திய பூசைக்கும் (போகம்) விழாக்களுக்கும் பூமி தானம் வழங்கியமையினைப் பதிவு செய்கின்றன.(EI-XV,No.2,p.25)

6.ஒசுப்பேட்டைக்கு அருகிலுள்ள சங்கலாபுரக் கல்வெட்டு கி.பி. 1513 இல் கிருஷ்ணதேவமகாராயர் அங்கே கோடி விநாயகருக்கு வழிபாடு, தேர்த்திருவிழா, கோயிற்றிருப்பணி என்பவற்றுக்கு வழங்கிய தானங்களை வர்ணிக்கின்றது.(EI-IV,No.38,p.269)

7.கிருஷ்ணதேவ மகாராயரின் பிரான்மலைக் கல்வெட்டு (கி.பி. 1518) அங்குள்ள நல்லமங்கைபாக சுவாமி ஆலயத்திற்கு வழங்கிய நித்தியயோக தானங்களை அறிவிக்கின்றது. (EI-XXI,No.19,p.124)

8.கிருஷ்ணதேவ மகாராயரின் சாசனமொன்று அசலாபுரி எனப்பட்ட கொண்டவீடு (ஆந்திரப் பிரதேசம்) நகரில் இராகவனுக்குக் கோயில் கட்டப்பட்டு, திருமதில், கோபுரம் என்பன எடுக்கப்பட்டமை பற்றித் தெரிவிக்கின்றது. தங்கத்தாற் படிமம் வார்த்து வழங்கப்பட்டது.

மேலும், மங்கள சைலத்திலே நரசிம் மன் கோயிலில் அரிக்கு இளங்கோயில் (பிரசாதம்) அமைக்கப்பட்டு, அதற்குத் தங்கக் கும்பங்கள் அணிசேர்க்கப்பட்டன.

9.மேற்படி ஆண்டில் மகாராயரின் மந்திரியான சாளுவதிம்ம கொண்டவீட்டில் இராமபத்திரனுக்குக் கோயில் கட்டி, ஒன்பது கலசங்கள் நிறுத்தி, கோபுரம், பிரகாரம், உற்சவ மண்ட பம் இணைத்து, உற்சவ விக்கிரகங்கள், தங்க நகைகள், முத்து மாலைகள் என்பவற்றைத் தானம் பண்ணினார். (EI-VI,No.32 .p.231)

10.கிருஷ்ணதேவ மகாராயரின் காஞ்சிபுரம், செப்பேடுகள், அவர் 1522 இலே பல புனிதத் தலங்களைத் தரிசித்துத் தானங்கள் வழங்கியமையினை வர்ணிக்கின்றது. சிதம்பரம், விருப்பாக்கம், திருக்காளத்தி, திருப்பதி, காஞ்சி, அகோபிலம், சங்கமம், திருவரங்கம், கும்பகோணம், மகா நதிதீர்த்தம், நிவ்ருத்தி, கோகர்ணம், இராமசேது ஆகிய தலங் களுக் கும் மகாராயர் யாத்திரை போனதாகச் சொல்லப் படுகின்றது. (EI-XIII, No.8.p.132)

ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய சிற்பம்



11. கிருஷ்ணதேவ மகாராயரின் உதயம் பாக்கம் சாசனம் (கி.பி. 1528) காஞ்சிபுரத்துச் சங்கராச்சாரியார் மடத்துச் சந்திசேகர சரசுவதி ஆச்சாரியாரின் மாணவர் சதாசிவ சரசுவதி அவர்களுக்கு வழங்கிய கொடையினைக் கூறும். (EI-XIV,No.12, p.169)

12.அச்சுதராயரின் கடலாடி செப்பே டுகள் (கி.பி. 1529) அவர் திருக்கோகர்ணம், சங்கமம், சிதம்பரம், சோனாத்ரி, விரிஞ்சிபுரம், காஞ்சி, திருக்காளாத்தி, கும்பகோணம் ஆகிய தலங்களிலுள்ள கோயில்களுக்கு வழங்கிய தானங்களின் விவரங்களைக் குறிப்பிடுகின்றன. (EI-XIV,No.12,p.169)

13. திருவரங்க நாதருக்குச் சிந்தாமணி என்னுங் கிராமத்தைச் சதாசிவராயர் மானியமாகக் கொடுத்தமை பற்றித் திருவரங்கத்திலுள்ள கல்வெட்டொன்று (கி.பி. 1545) குறிப்பிடுகின்றது. (EI-XXIX,No.9,p.77)

14.அரங்கநாதருக்கு இரத்தினக்கற்கள் பதித்த கவசம், பீதாம்பரம், கழுத்துமாலைகள், உஷ்ணீசம், கிரீடம், குண்டலங்கள், கடிசூத்திரம் முதலியவற்றை வேங்கடபதி மகாராயர் வழங்கியமையினை வெள்ளங்குடி பட்டயம் (கி.பி. 1598) மூலம் அறியமுடிகின்றது. மேலும், தேரோட்டம், நித்திய சேவைகள் என்பவற்றுக்கு வேண்டிய பொன்னும் பொருளும் இராயரால் வழங்கப்பட்டன.

இதுவரை மேற்கோளாகக் கையாளப்பட்ட சாசனக் குறிப்புகள் கிடைகின்றவற்றில் ஒரு சிலவேயாகும். ஆயினும், அவை தென்னகம் முழுவதிலுமுள்ள பிரதானமான தலங்களுக்கு விஜயநகர ராயர்கள் காலகாலம் யாத்திரை போனமைக்கும், அவற்றுக்குத் தானங்களை வழங்கி, ஆலய தருமங்களையும் கோயிற்கலைகளையும் பாதுகாத்தமைக்கும் சிறந்த உதாரணங்களாகும்.

விஜயநகர கலைப்பாணியில் அமைந்த கட்டடங்கள் பலவிடங்களில் உள்ளன. ஆந்திரப் பிரதேசத்திலுள்ள தாடிபத்திரி என்னும் ஊரிலுள்ள இராமலிங்கேஸ்ரவம் அவற்றில் ஒன்றாகும். அதில் ராஜகோபுரங்களும் வேங்கடரமணனின் திருப்பணியான மகா மண்டபமும் உள்ளன. மூன்று மூலஸ்தானங்கள் அமைந்த திருகூடாசலம் என்னும் லெபாக்ஷி கோயில் விஜயநகர காலத்து ஆலயங்களில் ஒன்றாகும். அதில் இரகு நாதன், வீரபத்திரன், பாபவிநாசன் ஆகியோர் மூலவராயுள்ளனர். பேணு கொண்டாவிலுள்ள சிவன் கோயிலும் இராமர் கோயிலும், புஷ்பகிரியில் அமைந்திருக்கும் சென்ன கேசவர், சந்தான மல்லேசுவரர், உமாமகேசுவரர் கோயில்களும் விஜய நகர காலத் தனவாகும்.

சோமபாலம் சென்னராயன் கோயிலும் அதன் மகாமண்டபம், கல்யாண மண்டபம் என்பனவும் அக்காலத்தனவாகும். சந்திர கிரியிலுள்ள ஒன்பது கோயில்களும் ஸ்ரீ சைலம் மல்லிகார்ச்சுனர் கோயில், பிர மராம்பாள் கோயில் என்பனவும் திருப்பதியிலுள்ள பல கட்டடங்களும் விஜயநகர கலைப்பாணியில் அமைந்தவை.

விஜயநகரம் கி.பி. 1565 இல் அழிக்கப் பட்டதும் அறவீடு வம்சாவழியினரான ராயர்கள் சந்திரகிரியை இராசதானியாகக் கொண்டனர். பின்பு, இராசதானி தமிழகத்தின் வட பகுதியிலுள்ள வேலூருக்கு மாற்றப்பட் டது. அவ்விரு நகரங்களிலும் விஜயநகர காலத்துக் கட்டடங்கள் உள்ளன.

சாசனங்கள் மூலம் கோயில்கள் சில வற்றைப் பற்றி மட்டுமே அறிந்து கொள்ளலாம். கோயில் களை அடை யாளங் காண்பதற்கும், அவற்றின் தோற்ற வளர்ச்சிகளை கால வரிசையில் வரையறைப் படுத்திக் கொள்வதற்கும் இலக்கியங்களுக்கும் கர்ண பரம்பரைக் கதைகளும் ஒரு வகையில் ஆதாரமாயுள்ளன.

100


தென்னிந்தியக் கட்டடக்கலை வரலாற்று ஆராய்ச்சியாளரில் முன்னோடிகளான டூப்ரோயில், பெர்கஸ்ஸன், பெர்ஸி பிரவுண், ஹவெல் நீலகண்ட சாஸ்திரி முதலியோர் தமிழகத் திலுள்ள கோயில்களில் ஒரு சில வற்றையே விஜயநகர கலைப் பாணிக்குரி யனவாக அடையாளங் கண்டனர்.

வேலூர் சலகண்டடேஸ்வரம், காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோயில், வரதராசப் பெருமாள் கோயில், சிதம்பரம், திருவரங்கம், மதுரை மீனாசஷி அம்மன் கோயில் ஆகியவற்றி லுள்ள கட்டடங்களே விஜயநகர கலைப்பா ணிக்குரிய உதாரணங்களாகக் கொள்ளப்பட் டன. ஆனால், உண்மையில் விஜயநகர காலத்துக் கோயில்கள் தமிழகத்து மாவட் டங்கள் எல்லாவற்றிலும் உள்ளன.

மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளிலே தாடிக்கொம்பு, அழகர்கோயில், ஆனைமலை, திருமோகூர், திருவாதவூர், திருப்பரங்குன்றம் போன்ற பலவிடங்களில் அக்காலத்துக் கோயில்கள் பலவற்றைக் காணலாம். இலக்கியக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு விஜயநகர காலத்திற்குரியனவாகிய 200 கோயில்களை இ.கா.கே. இரா சராசன் அடையாளங் கண்டுள்ளார்.

லெபாக்ஷியில் அமைந்திருக்கும் திரிகூடாசலக் கோயில் வீரபத்திரர் வழிபாட்டிற்குச் சிறப்பாகவுரிய தலமாகும்.

ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய கோபுரம்



அங்கே, ஆதியில், விஜயநகரத்துப் பம்பாதேவியினை ஒத்த வொரு கிராம தேவதை வழிபாடு நிலவிய தென்பர். "இரத்தக்கண்ணி" என்ற தேவதை யின் வழிபாடு நிலவியதன் காரணமாக லெபாசஷி என்னும் பெயர் உருவானதென்று கருதலாம்.

ஆயினும், சமஸ்கிருத மொழியில் **லேப** என்றால் ஒட்டுதல், மூதாதைய ருக்குப் பிண்டம் வழங்கிக் கையைத்துடைத் தல் அல்லது தீட்டு என்று பொருள்படும். **லேப பாகின்** என்பது தந்தைவழி 4 முதல் 6 வரையான தலைமுறையிலுள்ள மூதாதையரைக் குறிக்கும். உலோகத்தாலான கண்கள் ஒட்டப்பட்ட விக்கிரகத்தின் மூலம் வழிபடும் தேவதையொன்றினை லெபாக்ஷி என்று குறிப்பிட்டனர் என்றுங் கருதலாம். இன்றும் நாட்டுப்புறங்களில் இவ்வழக்கு நிலவுகிறது. அத்துடன் பிதிர்களுக்கு ஆண்டுதோறும் செலுத்தும் கடன்களை ஏற்கும் தேவதையாகவும் லெபாக்ஷியைக் கொள்ளலாம். இத்தலத்திலே தக்கனைச் சங்காரம் பண்ணிய வீரபத்திரர் முதலிடம் பெறுவதால் லெபாக்ஷி உமையோடு தொடர்புடையளவாகலாம். தக்ஷபிரஜாபதி உமையின் தந்தையாவான். சிவனின் உக்கிராம்சமாகிய வீரபத்திரனுடன் தொடர்புடையவர் என்பதால் லெபாக்ஷி காளியாதலுங்கூடும். (தொடரும்)

கலாநிதி இராசு காளிதாஸ்

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 9 விதி எண் : 5

### உடலமைப்பு

பிறந்த எண் 9 விதி எண் 5 ஆகக் கொண்டவர்கள் செவ்வாய், புதன் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் ஆவர். இவர்கள் சற்று உயரமானவர்களாகவும் உடல் பலம் கொண்டவர்களாகவும் இருப்பர். பிறரைக் கவரும் வண்ணம் இவர்களின் தோற்றம் காணப்படும்.

### மன, குணவியல்பு

இவர்கள் உண்மைக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்களாக இருப்பர். தன்னைச் சார்ந்தவர்களும் தம்மைப் போலவே உண்மையானவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பர். அப்படி இல்லாததைக் கண்டால் ஆத்திரத்திற்கு உள்ளாவர்.

இவர்கள் மனபலம் கொண்டவர். தம்மை எதிர்ப்பவர்களைப் பலமாகத் தாக்கி முறியடிக்கக் கூடியவர்கள். விரோதிகளைக் கண்டு கொஞ்சமும் அஞ்சமாட்டார்கள்.

இவர்கள் எப்போதும் சுறுசுறுப்புடன் செயற்படுவர். கொஞ்ச நேரமும் வீணடிக்காது பயனுள்ள காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர். இவர்களுக்கு மாறான நிலையில் யாராவது சோம்பியிருந்தால் அதையும் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். அவர்களைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் செய்வர்.

இவர்கள் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அதில் ஆதாயத்தைத் தேடிக்கொள்வர். ஆதாயமின்றி ஒரு காரியத்திலும் ஈடுபடமாட்டார்கள்.

இவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களைக் கண்டு கொஞ்சமும் வருத்தப்பட மாட்டார்கள். துணிச்சலுடன் எல்லாவற்றையும் கடந்து செல்லும் இயல்பு இயற்கையிலேயே இவர்களிடம் உண்டு.

இவர்களுக்கு நண்பர் அநேகர் இருப்பர். அவர்களின் நல்லவர்களும் கெட்டவர்களும் கலந்து இருப்பர். இரு சாராரையும் அனுசரித்துப் போகும் சுபாவமுடையவர்கள்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களின் குடும்ப வாழ்க்கை சுவாரஸ்யமாக இருப்பதில்லை. இவர்கள் குடும்பத்தில் அடுத்தடுத்து இடையூறுகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். பொருள் நஷ்டமும் ஏற்பட வாய்ப்புண்டு. எதைப் பற்றியும் கவலையின்றி இருந்தாலும் வாழ்க்கை திருப்திகரமாக இருப்பதில்லை.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கல்வி கற்றவர்களாகவும் மருத்துவம், பொறியியல், சட்டம் மற்றும் ஆசிரியர்களாகவும் தொழிற்கல்வியும் அது தொடர்பான பணியும் புரியக்கூடும். அரசு ஊழியராகவும் இருக்க வாய்ப்புண்டு. இவர்கள் நெருப்பு மின்சாரம் தொடர்பிலான தொழில்களை நடத்தவும் ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் பிரசித்தி பெற்றிருக்கவும் கூடும்.

இவர்கள் தம் தொழிலில் பெருமளவு பொருள் சம்பாதிக்கக் கூடும். இருப்பினும் இவர்களுக்கு அதற்கேற்ப விரயமும் ஏற்படும்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ணம் மற்றும் பித்த சம்பந்த மூலம். இரத்த அழுத்தம், காமாலை போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இருதயம். மூட்டுவலி, முதுகுவலி போன்றனவும் ஏற்படக் கூடும். இரத்தம் கெடுவதால் சரும வியாதிகள் கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்களுக்குச் செவ்வாய், புதன் ஆதிக்கம் பெற்ற 9.5 தொடர்பிலானவற்றில் யோகமான எண்களுக்கு தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

இவர்களது நிறுவனங்களுக்கும் 9,5 தொடர்பிலான யோகமான எண்களுக்குப் பெயர் அமைக்க அதிர்ஷ்டமாகும்.

இவர்களுக்கு 9,5 தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமானவை.

ஆனால் சந்திரன் கேது ஆதிக்கம் பெற்ற 2,7 மற்றும் அவை தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமற்றவை.

## உடல் எண் : 9 விதி எண் : 6

### உடலமைப்பு

பிறந்த எண்9 விதி எண் 6 ஆகக் கொண்டு பிறந்தவர் செவ்வாய், சுக்கிரன் இருவரின் கூட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் உயரமாகவும் கம்பீரத் தோற்றத்துடனும் காணப்படுவர். இவர்கள் ஆடம்பரமாக ஆடை அணிந்து எப்போதும் மிடுக்காகக் காட்சியளிப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் அறிவாற்றல் பெற்றவர்கள். எதையும் ஒரு முறைக்கு பலமுறை ஆழ்ந்து சிந்தித்து பின்தான் எக்காரியத்தையும் செய்வர். இவர்கள் இலட்சியவாதிகளாயிருப்பர். தம் உழைப்பினாலேயே உயர்வடைய வேண்டும் என்ற இலட்சியம் கொண்டவர்கள்.

இவர்களுக்கு வீணாகப் பேசிக் காலங் கழிப்பது என்றால் அறவே பிடிக்காது. அவ்வாறு இருப்பவர்களைக் கண்டால் கண்டிக்கும் சுபவாம் உடையவர்கள்.

இவர்கள் நல்லவர்கள் என்று கூறுவதை விட சமயோசிதவாதி என்று கூறலாம். நல்லவர்களுக்கு நல்லவர்கள். வல்லவர்களுக்கு வல்லவர்களாக இருப்பர்.

தன்னை ஏமாற்ற நினைப்பவருக்கு ஏமாற்றுக்காரராக இருப்பர். இவர்கள் தெரிந்து ஒருவருக்கும் கெடுதல் செய்யமாட்டார்கள். ஆனால் தனக்குக் கேடு நினைப்பவர்களை விடவும் மாட்டார். அவர்களுக்கு கேடு விளைவிப்பர்.

இவர்கள் சுயநலவாதிகள் என்று கூறிவட முடியாது. தம்மைப்போல பிறரும் முன்னேற வேண்டுமென்ற உயரிய நோக்கம் கொண்டவர்கள். பொது நலத் தொண்டிலும் மிக ஆர்வமுள்ளவர்களாக இருப்பர்.

இவர்கள் எந்த நிலையிலும் நடுநிலை தவறாதவர்களாக இருப்பர். அதனால் பலரும் இவர்களிடம் நியாயம் கோரிவருவர். இவர்களுக்கு நண்பர்கள் அதிகம் பேர் இருப்பர். சமயப் பற்றும் இவர்களிடம் காணப்படும். ஆனால் எதிலும் அளவான போக்குடன் இருப்பர்.

இவர்கள் உலகிலுள்ள இன்பங்கள் அனைத்தையும் அனுபவிக்க வேண்டுமென்ற தணியாத தாகம் கொண்டவர்களாக இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கைத்துணை ஏற்றவராகவும் அனுசரித்துப் போகக் கூடியவராகவும் அமைவர். குடும்பத்தில் சந்தோஷமும் அமைதியும் நிலவும். புத்திர பாக்கியத்திற்கும் குறைவிருக்காது.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் பொறியியல், மருத்துவம். சட்டம், இராணுவம், காவல்துறை போன்ற ஒன்றில் பயிற்சி பெற்றவராகவும் அது தொடர்பானவற்றில் உயர்பதவி வகிப்பவராகவும் இருப்பர். இவைதவிர அறிவியல் மேதைகளாகவும் ஜோதிட மேதைகளாகவும் இருக்கக்கூடும்.

எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் பெற்றவர்கள். பெரிய வியாபாரிகளாகவோ தொழிலதிபராகவோ இருக்கக்கூடும். ஆடம்பரமான பொருட்களை விற்பவராக அல்லது ஏஜென்சிகளாக இருக்கக்கூடும். ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் ஈடுபடுபவராகவும் இருக்கக்கூடும்.

விவசாயம், நிலம், கட்டுமானப் பணி போன்றவைகளில் கூட இவர்களுக்கு இலாபம் உண்டு.

இவர்கள் எந்தத் தொழிலிலும் மிகவும் அக்கறையுடன் ஈடுபட்டுப் பெருமளவு சம்பாதிப்பர். இவர்கள் தம் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி ஓர் உன்னத நிலையை அடையக்கூடும்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு சிறுநீரகம் தொடர்பான தொல்லைகளும் நீரிழிவு நோயும் ஏற்படக் கூடும். இருதயநோய், இரத்த அழுத்தம், பல்வலி, மூலம், பவுத்திரம், முதுகுவலி, இடுப்புவலி போன்றனவும் ஏற்படக்கூடும்.

### சாதக பாதக எண்களும், திகதியும்

இவர்கள் செவ்வாய், சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 9,6 அது தொடர்புடைய யோக பலன் தரும் எண்களுக்குப் பெயர் அமைத்துக்கொள்ளலாம்.

இவரது நிறுவனங்களுக்குக் கூட 9.6 தொடர்புடைய பெயர்களே அதிர்ஷ்டமானவை.

இவர்களுக்கு 9,6 மற்றும் அவை தொடர்புடைய எண்களும் திகதியும் யோகமானவை.

ஆனால் சந்திரன்,கேது ஆதிக்கம் பெற்று 2,7 அது தொடர்புடைய எண்களும் திகதியும் யோகமற்றவை. (தொடரும்)

# டப்ளின் நீதிமன்றில் இலங்கை அரசுக்கெதிரான சாட்சியங்களை பலர் சமர்ப்பிக்கவுள்ளனர்

(கொழும்பு)

டப்ளினில் இவ்வாரம் இடம்பெறவுள்ள பொதுமக்கள் நீதிமன்ற அமர்வின் போது இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுக்களை பொதுமக்கள் பலர் சாட்சியங்கள், புகைப்படங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் நீதிமன்ற தரப்பு செய்திகளின் படி, உலகத்தின் பல பகுதிகளில் இருந்து, இந்த நீதிமன்றத்திற்கு சாட்சியங் களை தருவதற்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சாட்சியங்களின் உறுதித் தன்மையைக் கருத்திற்கொண்டு அனைத்துப் புகைப்பட சாட்சியங்களையும் தம்மால் கோர முடியவில்லை என டப்ளின் பொதுமக்கள் நீதிமன்றத் தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டதாகக் கூறப்படும், குற்றங்கள் தொடர்பில் புகைப்பட சாட்சியங்களை சமர்ப்பிப்போருக்கான பாதுகாப்புக்களை வழங்க தாம் ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக இலங்கை தொடர்பான பொதுமக்கள் நீதிமன்றத்தின் இணைப்பாளர் ஜூட் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இந்த நீதிமன்ற அமர்வுகள் எதிர்வரும் வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் டப்ளினில் உள்ள டினிட்டி கல்லூரியில் நடைபெறவுள்ளன. இந்த நீதிமன்றத்தின் முடிவுகள் எதிர்வரும் சனிக்கிழமையன்று பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப்படவுள்ளது.

இப் பொதுமக்கள் நீதிமன்றத்தில் ஆசிய, மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் லத்தீன் அமெரிக்காவின் 11 ஜூரிகள் பங்கேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## செலிங்கோ, சக்வித்தி வைப்பாளர்களுக்கு எவ்விதத் தீர்வுகளும் முன்வைக்கப்படவில்லை

செலிங்கோ மற்றும் சக்வித்தி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு எவ்விதத் தீர்வுகளும்இதுவரையில் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட வைப்பாளர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட உள்ளதாக அரசாங்க ஆங்கிலப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானது என்றும் இதுவரையில் தமக்கு எவ்வித சாதகமான தீர்வுத் திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை எனவும், நாளுக்கு நாள் பிரச்சினை அதிகரித்துச் செல்வதாகவும் வைப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். செலிங்கோ நிறுவனம் மற்றும் சக்வித்தி நிறுவனம் ஆகியவற்றில் பணத்தை வைப்பு மற்றும் முதலீடு செய்து பாதிக்கப்பட்டவர்கள் கூட்டாக இணைந்து நடத்திய ஊடக சந்திப்பின்போது இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (2-6)

# சுற்றுலாக்களை மேற்கொள்ளக்கூடிய முதனிலை நாடாக இலங்கை

## டைம்ஸ் பத்திரிகை

(கொழும்பு)

சுற்றுலாக்களை மேற்கொள்ளக் கூடிய உலகின் முதனிலை நாடாக இலங்கையை டைம்ஸ் பத்திரிகை பட்டியல்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் மிகப் பிர்பலமான அமெரிக்க பத்திரிகையான நியூயோர்க டைம்ஸின் பட்டியல்படுத்தலின் அடிப்படையில் இலங்கை சுற்றுலாப் பயணிகளுக்கு சொர்க்க புரியாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் இலங்கைக்கு சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வதில் சிக்கல் இல்லை என குறித்த பத்திரிகையின் பயண எழுத்தாளர் லனல் பீனர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நிலாவெளி கடற்கரை போன்ற பிரதேசங்களுக்கு பயணம் செய்வது மிகவும் பயனுள்ளதென அவர் பரிந்துரை செய்துள்ளார்.

எனினும் பாதுகாப்புக் கெடுபிடிகள் முழுமையாக தளர்த்தப்படாத காரணத்தினால் சில பிரதேசங்களுக்கான சுற்றுலாப் பயணங்களை சுதந்திரமாக மேற்கொள்வதில் இன்னமும் சிக்கல் நிலை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# போலிக் கடவுச் சீட்டில் இந்தியா சென்ற இலங்கையர் நாடு கடத்தப்படவுள்ளார்

(சென்னை)

போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு சென்றபோது கைதுசெய்யப்பட்ட இலங்கையர் ஒருவர் தமிழகத்திலிருந்து நாடு கடத்தப்படவுள்ளார்.

குறிப்பிட்ட நபர் இம்மாத இறுதியில் நாடு கடத்தப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிவான் இம்மாத இறுதியில் நாடு கடத்த உத்தரவிட்டார். இதனை ஆட்சேபித்தும் நாடு கடத்தும் கால அவகாசத்தை நீடிக்குமாறும் குறித்த நபர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரையும் நாடு கடத்தும் காலத்தை நீடிக்குமாறு அவர் கோரியிருந்தார்.

குறித்த நபரின் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது, இதனை நிராகரித்த நீதிமன்றம் இம்மாதம் இறுதிக்குள் நாடு கடத்துமாறு உத்தரவிட்டுள்ளது. (6-3)

# என்றென்றும் எம்.ஜி.ஆர்! இன்று அவர் பிறந்த நாள்!!

ஜெ.கி.ஜெயசீலன்

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்!"

இது திருக்குறள்! அமரர் எம்.ஜி.ஆர் இதன் கருப்பொருள்!

- கலைத்துறை, அரசியற்துறை, பொதுவாழ்க்கை ஆகிய முப்பெருந்துறைகளிலுமே ஈடிணையற்ற மாமேதை எம்.ஜி.ஆர்!
- ஈதல் இசைபடவாழ்தல் என்கிற குறள் வார்த்தையைத்தன் உயிர் வாழ்க்கையாகவே ஆக்கிய புரட்சிக்கலைஞர் நமது எம்.ஜி.ஆர்!
- அவருக்கு நிகரென அவரே ஆனபின் அவருக்கேதடா அரை குறைவாரிசுகள்!?
- கண்டியில் உதித்த அக்கலைச் சுடர்க்கதிரவன் திரைப்படவானிற் திசையெலாம் ஒளிர்ந்தவன்!
- நேற்றும் எம்.ஜி.ஆர்! இன்றும் எம்.ஜி.ஆர்! நாளையும் எம்.ஜி.ஆரே!? அவருக்கு ஈடிணை வேறு யாரோ!?



வடஇந்தியக் கலைஞர் இயக்குநர் வி.சாந்தராமை வணங்குகிறார்.




ஈ.வே பெரியாருடன்



அறிஞர் அண்ணாவுடன்



நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, கே.ஏ.மதியழகன்ஆகியோருடன்



திரைப்படக் கலைக் கூடத் தில்எம்.ஜி.ஆர்.

11.01.2010 அமரர் மாமேதை எம்.ஜி.ஆர் அவர்களின் 94ஆவது பிறந்தநாளை யொட்டிய புகைப்படங்களும் சிறு குறிப்புரைகளும்.

## இந்தோனேஷியாவில் அகதிகளிடம் இலங்கைக் கடற்படை விசாரணை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரச் சென்று தற்போது இந்தோனேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களிடம் இலங்கைக் கடற்படை அதிகாரிகள் விசாரணை நடத்தியதாக அவுஸ்திரேலியாவிலுள்ள அகதிகளுக்காகக் குரல் கொடுக்கும் ஒருவரை மேற்கோள்காட்டி அவுஸ்திரேலியப் பத்திரிகையான திஏஜ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்தோனேஷியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தைச் சேர்ந்த கப்டன் கபில் மற்றும் இரு உத்தியோகஸ்தர்கள் இலங்கை அகதிகள் எண்மரிடம் விசாரணை நடத்தியதாக அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த சாரதாநாதன் தெரிவித்துள்ளார்.

மேற்படி புகலிடம் கோருவோர் இலங்கையில் எதிர்கொள்ளும் துன்பங்களிலிருந்து தப்பிச் செல்ல முயற்சிக்கும் நிலையில் அவர்களை இலங்கை விசாரிப்பதற்கு இந்தோனேஷியா அனுமதிக்கக் கூடாது எனவும் நாதன் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அகதிகள் மற்றும் புகலிடம் கோருவோரின் அந்தஸ்து தொடர்பான அகதிகள் ஒப்பந்தத்தில் இந்தோனேஷியா கையெழுத்திடவில்லை. மேற்படி புகலிடம் கோருவோர் இந்தோனேஷியாவில் பாதுகாப்பாக இல்லை. அகதிகளுக்கு ஒரு நாட்டில் புகலிடம் அளிக்கும் ஒரு நாட்டில் அதற்கான செயன்முறைகள் மேற்கொள்ளப்படுவதற்காக அவர்கள் உடனடியாக அவுஸ்திரேலியாவிற்கு அழைத்து வரப்படவேண்டும் என்றார். (2-6)

## ஆட்சிக்கு வந்த 48 மணி நேரத்தில் மோசடியாளர் மீது நடவடிக்கை

### சரத் பொன்சேகா

(கொழும்பு)

ஆட்சிக்கு வந்த 48 மணித்தியாலங்களில் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மகரகம பிரதேசத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கையில் நெடுஞ்சாலையொன்றின் ஒரு கிலோ மீற்றர் பகுதியை நிர்மாணிக்க உள்நாட்டு ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு 30 மில்லியன் ரூபா வழங்கப்படும் அதே வேளை வெளிநாட்டு நிறுவனங்கள் கிலோ மீற்றருக்கு 113 மில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொள்வதாக அவர் சுட்டிக்காட்டினார்.


இதன் காரணமாக வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 83 மில்லியன் ரூபா மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் கிலோ மீற்றருக்கு 83 மில்லியன் வீதம் 50 கிலோ மீற்றர் வீதி என்றால் நிலைமை எவ்வாறு அமையும் என வினவினார்.

இத்தகைய முறைகேடுகளை நீதிமன்றம் சென்று வழக்குத் தாக்கல் செய்து நிரூபிக்கவேண்டுமென ஜெனரல் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

மேலும் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயற்றிட்டங்களுக்கும் பகிரங்க விலை மனுக் கோரல் இடம்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (2-3)

# காதால் எழுதும் ஓவியர்

(திருக்கோவிலூர்)



திருக்கோவிலூரை அடுத்த மணலூர்பேட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகன் செல்வம். இவர் ஓவிய ஆசிரியர் பயிற்சியை முடித்து தற்போது சுவர் விளம்பரங்கள் மற்றும் விளம்பரப் பலகைகளில் எழுதும் வேலையை செய்து வருகிறார்.

சாதிக்கவேண்டும் என்ற அடிப்படையில் கடந்த 5 ஆண்டுகளாக தேசத் தலைவர்கள் மற்றும் தெய்வத்தின் படங்களை வித்தியாசமாக வரைய வேண்டும் என்று நினைத்தார்.

இதையடுத்து தொடர்ந்து அவரது நாக்கு, தாடி, கண் இமை, பல்,தலைமுடி, மூக்கு ஆகியவைகளைக் கொண்டு பல்வேறு படங்களை வரைந்துள்ளாார்.

இதையடுத்து கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற போலியோ சொட்டு மருந்து முகாமை முன்னிட்டு மணலூர்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்த விளம் பரப் பலகையில் மீண்டும் வித்தியாசமான முறையில் தனது காதைப் பயன்படுத்தி அதன் மூலம் தூரிகையைக் கொண்டு போலியோ இல்லாத உலகம் படைப்போம் என்ற வாசகத்தை எழுதினார். (6)

# பெற்றோருக்கு தெரியப்படுத்திய பிறகே காதல் திருமணம் பதிவு செய்யப்படும்

## -மேற்குவங்கத்தில் புதிய நடைமுறை-

பெற்றோருக்கு தகவல் தெரியப்படுத்திய பிறகே காதல் திருமணத்தை பதிவு செய்யும் விதத்தில் மேற்கு வங்கத்தில் புதிய சட்ட விதிமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.


படிக்கிற காலத்திலோ அல்லது வேலை தேடுகிற காலத்திலோ இளம் வயதினர் காதல் வயப்பட்டு காதலிக்கின்றனர். மதம் மாறி, இனம் மாறி, தகுதி அந்தஸ்தை விட்டுக் கொடுத்துக் காதலிப்பவர்களை பெரும்பாலும் பெற்றோர் ஏற்றுக்கொள்வதில்லை. இதனால் காதலர்கள் தங்களது நண்பர்கள் அல்லது உறவினர் துணையுடன் சாட்சி கையெழுத்துப் போட்டு போலியான சான்றுகளை அளித்து திருமணம் செய்து கொள்கின்றனர்.

இப்படி திருமணம் செய்யும் பலரது வாழ்க்கை நிலைப்பது இல்லை. வாழ்க்கையில் பல பிரச்சினைகளை சந்திக்கின்றனர். சமயத்தில் தற்கொலைகள் கூட நடக்கின்றன. இதைத் தடுக்கும் விதத்தில் மேற்கு வங்கச் சட்டம் மற்றும் நீதித்துறை இவ்வாறு திருமண சட்டத்தில் புதிய திருத்தங்களை செய்துள்ளது. அதன்படி காதலர்கள் பதிவுத் திருமண விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது அவர்களது சமீபத்திய புகைப்படங்களை அளிக்க வேண்டும்.

பெற்றோர் அல்லது பாதுகாவ லரின் பெயர், முகவரி பற்றிய அசல் சான்று களை சமர்ப்பிக்கவேண்டும். காதலர்கள் ஜோடியாக எடுத்த புகைப்படத்தை இணைக்க வேண்டும் என்பன போன்ற நிபந்தனைகளை விதித்துள்ளது.

இந்த ஆவணங்கள் அனைத்தையும் பெற்ற பின்னர் கடிதம் மூலம் பெற்றோரது சம்மதத்தை கோருகிறது. அவர்கள் சம்மதம் கிடைத்த பின்னரே திருமணத்தை பதிவு செய்கிறது. இப்படி பல விதி முறைகளை வகுத்துள்ளது. (2-6)

# அமெரிக்காவில் நிலநடுக்கம் 6.5ரிக்டர் அளவில் பதிவானது



(கலிபோர்னியா)

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் கடலோரப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.27 மணிக்கு இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 12.30 மணிக்கு திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோலில் 6.5 அளவில் பதிவானது.

கலிபோர்னியாவில் கடற்கரை நகரமான இருகாவில் இருந்து தெற்கு ஓரிகன் எல்லை வரை இந்த நில நடுக்கம் ஏற்பட்டது.

இதனால் மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். பதட்டமும் பரபரப்பும் அடைந்தனர். பீதியில் வீடுகள் மற்றும் அலுவலக கட்டங்களை விட்டு வெளியேறி ரோட்டுக்கு ஓடி வந்தனர்.

சுனாமி ஏற்படுமோ என்ற அச்சத்தில் இருந்தனர். ஆனால் சுனாமி ஆபத்து இல்லை என அமெரிக்க புவியியல் மையம் அறிவித்தது. அதன் பிறகே நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

நில நடுக்கத்தால் ஏற்பட்ட சேத மதிப்பு விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. மேலும் கடந்த 2 நாட்களாக சான்பிரான் சிஸ்கோ பகுதியில் 2 தடவை லேசான நில நடுக்கம் ஏற்பட்டதும் தற்போது தெரியவந்துள்ளது. (2-6)

# பர்தா அணிந்தால் 5 இலட்சம் அபராதம்

பிரான்சு நாட்டில் பொது இடங்களில் பர்தா அணிந்தால் ரூபா 5 இலட்சம் அபராதம் விதிக்கப்படும் என்று சட்டம் கொண்டு வர அந்த நாட்டு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மேலும் பர்தா அணியும்படி முஸ்லிம் பெண்களைக் கட்டாயப்படுத்தும் ஆண்களுக்கு அபராதம் இரு மடங்காக விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு வகை செய்யும் சட்டம் பாராளுமன்றத்தில் இந்த மாத இறுதியில் தாக்கல் செய்யப்படுகிறது.இந்த சட்டம் பெண்களின் கண்ணியத்தைபப் பாதுகாக்கவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கொண்டு வரப்படுகிறது.

இதற்கமைவாக பிரான்சு போன்ற மதச் சார்பற்ற நாட்டில் பர்தா அணிவது முஸ்லிம் அல்லாதவர்களை அன்னியப்படுத்துகிறது. அவர்களை மிரட்டுகிறது. இதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிரசான்சு அதிபர் சர்கோசி கூறியிருக்கிறார்.

இந்தச் சட்டம் முஸ்லிம்களை மட்டும் குறிவைத்து கொண்டுவரப்படவில்லை. யார் ஒருவர் முகத்தை மறைத்துக் கொண்டு வந்தாலும் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் பிரான்சு நாட்டு ஆளும் கட்சியான யு.எம்.பி.கட்சி தெரிவித்துள்ளது. (2-6)

# கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 14 வயது சிறுவனுக்கு அனுமதி

இங்கிலாந்தை சேர்ந்த சிறுவன் அர்ரன் பெர்னான்டஸ் சர்ரே மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் வசிக்கும் அவன் வீட்டிலேயே படித்துவந்தான். கணிதத்தில் அவன் சிறு வயதிலேயே மேதையாகத் திகழ்கிறான். இந்த மேதையை மெச்சி கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் அவனுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் நுழைவுத் தேர்வில் அவன் வெற்றி பெற்றால் அவனுக்கு இந்த பல்கலைக்கழகத்தின் பிட்ஸ்வில்லியம் கல்லூரியில் பட்டவகுப்பில் இடம் கிடைக்கும். அவன் இப்போது இயற்பியல் பாடத்தில் ஏ-லெவல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

இது பற்றி அந்தச் சிறுவனின் தந்தை நீல் பெர்னான்டஸ் கூறுகையில், அர்ரன் தான் குறைந்த வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகக் கல்லூரியில் பட்டவகுப்பில் சேரும் முதல் மாணவன் என்றார்.

இதற்கு முன்பு 1773 ஆம் ஆண்டு வில்லியம் பிட் இதே வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அவர் பிற்காலத்தில் பிரதமர் ஆனார் என்றும் அவர் தெரிவித்தார். (2-6)

# அமெரிக்க விமானங்களை தகர்க்க இன்னும் 20 இளைஞர்கள் தயார் நிலையில்

## நைஜீரிய பயங்கரவாதி தகவல்



(வோஷிங்டன்)

அமெரிக்க விமானங்களைத் தகர்க்க அல்கொய்தாவினால் பயிற்சி அளிக்கப்பட்ட 20 இளைஞர்கள் ஏமன் நாட்டில் தயார் நிலையில் உள்ளனர் என நைஜீரிய பயங்கரவாதி உமர் பரூக் அப்துல் முதாலப் தெரிவித்துள்ளான்.

கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று நோர்வேயின் ஆம்ஸ்டர்டாமிலிருந்து அமெரிக்காவின் நார்த் வெஸ்ட் ஏர்லைன்ஸ் விமானத்தை தகர்க்க முயன்றதாக அந்த விமானத்தில் பணம் செய்த நைஜீரியாவைச் சேர்ந்த உமர் பரூக் அப்துல் முதலாப் (23) என்ற பயங்கரவாதி கைது செய்யப்பட்டான். அவனிடம் அமெரிக்காவின் பெடரல் புலனாய்வுத்துறையினர் (எப்.பி.ஐ) தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அதில் அமெரிக்க விமானங்களை தகர்ப்பதற்காக இன்னும்20 இளைஞர்கள் அல்கொய்தா அமைப்பினரால் பயிற்சி அளிக்கப்பட்டு ஏமன் நாட்டில் தயார் நிலையில் உள்ளனர். என தெரிவித்துள்ளான். இதையடுத்து அமெரிக்க அதிகாரிகள் பலர் உஷார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (6)

# அமெரிக்காவுக்கு ஒருவாரகெடு ; நைஜீரிய செனட் விதித்துள்ளது


தீவிரவாதம் மலிந்த நாடுகளில் இருந்து அமெரிக்கா செல்லும் பயணிகளிடம் பாதுகாப்பு சோதனை கடுமையாக இருக்கும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதன்படி தீவிரவாதம் மலிந்த நாடுகள் என்று கூறி சில நாடுகளின் பட்டியலையும் அமெரிக்கா வெளியிட்டுள்ளது.அந்தப் பட்டியலில் நைஜீரியா நாட்டின் பெயரும் உள்ளதால் இதற்கு அந்த நாடு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இது குறித்து நைஜீரிய செனட் அமெரிக்காவுக்கு ஒருவாரம் கெடு விதித்துள்ளது.

இந்தக் கெடுகாலத்திற்கு நைஜீரியாவின் பெயரை தீவிரவாதம் மலிந்த நாடுகள் பட்டியலில் இருந்து அமெரிக்கா நீக்க வேண்டும். இல்லாவிட்டால் , அந்த நாட்டின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நைஜீரிய செனட் கூறியுள்ளது.

நைஜீரிய நாட்டு அப்துல் முத்தலிப் அமெரிக்க விமானத்தை தகர்க்க முயன்றதை தொடர்ந்து அந்த நாட்டின் பெயரையும் தீவிரவாதம் மலிந்த நாடாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது குறித்து செனட் சபையின் செய்தி தொடர்பாளர் அனியாகுஈஸ் கூறுகையில், அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டுள்ளனர். தவறு அவர்கள் பக்கம் உள்ளது. ஆனால் எங்கள் நாட்டை அந்தப் பட்டியலில் சேர்க்கிறார்கள். நைஜீரியாவில் அல்கொய்தா அமைப்பு ஏதும் கிடையாது என்று குறிப்பிட்டார். (6)




பசிபிக் பெருங்கடலில் கண்டெடுக்கப்பட்ட அரிய வகை மீன்இனம்...

# ஜனாதிபதித் தேர்தல்

## தபால் மூலம் வாக்களிக்கும் தமிழ்ச் சகோதர சகோதரிகளே!


முடிந்து போன யுத்தத்தில் நிகழ்ந்த
எம் உடன் பிறப்புக்களின்
கோர மரணங்களுக்கும்
கொடிய அவலங்களுக்கும்
காரணமான 'எவரையும்'
எமது மக்கள் ஆதரிக்கக் கூடாது!

**'ஆட்சி மாற்றம்' என்பது–சிங்கள மாயை!**
**உண்மையில் அது 'ஆள்' மாற்றமே!!**



நீதியான தீர்வைக் கோரி
நிமிர்ந்து நிற்போம்...
துணிந்து நிற்போம்...

ஓரணி திரண்டு நேர்வழி நின்று சிவாஜிலிங்கம்
அவர்களை ஆதரிப்போம்!
கப்பல் சின்னத்திற்கு
வாக்களிப்போம்!!




**சுதந்திரம் எமது பிறப்புரிமை!**
**சுயாட்சி எமது கோரிக்கை!!**

# சனாதிபதித் தேர்தல்-2010

## யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகஞ் செய்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களை அமைத்தல் என்பன தொடர்பான பொதுமக்களுக்கான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு 2010.01.11 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

02. அந்த தேர்தல் மாவட்டத்தின் ஆட்கள் இடம்பெயர்ந்துள்ளதன் காரணமாக வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் விதம் மற்றும் உத்தி யோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகஞ் செய்யும் முறை என்பன தொடர்பாக தெளிவுபடுத்துமுகமாக இந்த அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

03. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

3.1 யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய்,கோப்பாய்,உடுப்பிட்டி , பருத்தித்துறை,சாவகச்சேரி , நல்லூர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய வாக்கெடுப்புப் பிரிவுகள் அடங்கியுள்ளன. அந்த வாக்கெடுப்புப் பிரிவுகளுள் கிளிநொச்சி வாக்கெடுப்புப் பிரிவு தவிர்ந்த எஞ்சிய வாக்கெடுப்புப் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு , அவர்கள் 2008 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரிகளுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகஞ் செய்வதற்கு அஞ்சல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

3.2 பருத்தித்துறை, வாக்கெடுப்புப் பிரிவின் 36 இலிருந்து 43 வரையும் காங்கேசன்துறை வாக்கெடுப்புப் பிரிவில் 21 இலிருந்து 25 வரையும் மற்றும் 30 இலிருந்து 58 வரையுமான வாக்கெடுப்பு மாவட்டங்கள் உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த பிரதேசங்களாகும். அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியுமென யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் தெரிவத் தாட்சி அலுவலர் கிராம அலுவலர்கள் மூலமாக வாக்காளர்களை அறிவூட்டுவார்.

3.3 யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிளிநொச்சி வாக்கெடுப்பு பிரிவு

இந்த வாக்கெடுப்புப் பிரிவின் வாக்கெடுப்பு மாவட்டங்கள் எந்த பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்ததென்றும் அவற்றுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் விதமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பிரதேச செயலாளர் பிரிவு | உரித்தான வா.மா. | வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் இடங்கள் |
|---|---|---|
| கரைச்சி (கிளிநொச்சி) | 1–42 | இல.1 முதல் 11, மற்றும் 14 முதல் 25,29,32,34 முதல் 42 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்படவுள்ளன. இந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி பிரதான அஞ்சல் அலுவலகத்தில் வைக்கப்படும். வாக்காளர் கள் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு அஞ்சல் அலுவலகங்களிலிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.<br>கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த எஞ்சிய வாக் கெடுப்பு மாவட்டங்கள், இல. 12, 13,26 முதல் 28 ,30,31, 33 ஆகிய வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள்,கி/ கண்ணகைபுரம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி அஞ்சல் அலுவலகத்தில்/ அந்த வாக்கெடுப்பு மாவட்டத்திற்குரிய அஞ்சல் அலுவலகங்களினால் விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| கண்டாவளை | 43–58 | இல.43 முதல் 58 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்படவுள்ளன. இந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி பிரதான அஞ்சல் அலுவலகத்தில் வைக்கப்படும். வாக்காளர்கள் அவர்களது ஆள டையாளத்தை நிரூபித்து விட்டு அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| பூநகரி | 59–77 | இல.59 முதல் 61 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கிளிநொச்சி, பூநகரி , நல்லூர் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>இல.62 முதல் 63 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கி/கருக்காய்தீவு அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>இல.64 முதல் 66 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக் கான வாக் கெடுப்பு நிலையங்கள் பூநகரி கி/பூநகரி மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன. 67ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/பரமன்கிராய் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>68ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/கௌதாரிமுனை அரசாங்கதமிழ்கலவன்பாடசாலையில்அமைக்கப்படவுள்ளன. இல.69 முதல் 70 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கி/ஜெயபுரம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>இல. 71 முதல் 72 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு கி/ கரியாலை நாகபடுவான் இல. 3 அரசாங்க பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>73 ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/முழுங்காவில் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>74 ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/நாச்சிக்குடா அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>75 ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/கிராஞ்சி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>76 ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>77 ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/இரணைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன. இந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி பிரதான அஞ்சல் அலுவலகத்தில் வைக்கப்படும் குறிப்பிட்ட வாக்காளர்கள் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்து விட்டு அஞ்சல் அலுவலகத்திலிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| பச்சிலைப்பள்ளி | 78–95 | இல .78 முதல் 95 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>இந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி பிரதான அஞ்சல் அலுவலகத்தில் வைக்கப்படும் . குறிப்பிட்ட வாக்காளர்கள் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு அஞ்சல் அலுவலகத்திலிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். |

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய.
2010 சனவரி மாதம் 11ஆம் திகதி.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

# சனாதிபதித் தேர்தல்-2010

## முல்லைத்தீவு வாக்கெடுப்புப் பிரிவில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகஞ் செய்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களை அமைத்தல் என்பன தொடர்பான பொதுமக்களுக்கான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், முல்லைத்தீவு வாக்கெடுப்புப்பிரிவு உட்பட்ட வன்னி தேர்தல் மாவட்டத்தின் ஏனைய வாக்கெடுப்புப் பிரிவுகளில் 2010.01.11 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

02. முல்லைத்தீவு வாக்கெடுப்புப் பிரிவின் ஆட்கள் இடம்பெயர்ந்துள்ளதன் காரணமாக வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் விதம் மற்றும் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகஞ் செய்யும் முறை என்பன தொடர்பாக தெளிவுபடுத்துமுகமாக இந்த அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

03. முல்லைத்தீவு மாவட்டம்/ வாக்கெடுப்புப் பிரிவு

இந்த வாக்கெடுப்புப் பிரிவில் 50 வாக்கெடுப்பு மாவட்டங்கள் இருப்பதோடு அவை எந்த பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்ததென்றும் அவற்றுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் முறையும் கீழே காட்டப்பட்டுள்ளன. வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படும் வாக்கெடுப்பு நிலையங்களுக்கான வாக்காளர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை 2010.01.11 ஆம் திகதி முதல் தமது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு வவுனியா அஞ்சல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அதே பிரதேசங்களில் குறிப்பிட்ட வாக்கெடுப்பு மாவட்டங்களினுள்ளேயே அமைக்கப்படும். ஆகவே அந்த பிரதேசத்துக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கடிதங்கள் விநியோகிக்கப்படும் அஞ்சல் அலுவலகங்கள் மூலமாக வாக்காளர்களுக்கு விநியோகஞ் செய்யப்படும்.

ஏனைய இடம்பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் 25, 26 ஆம் வாக்கெடுப்பு நிலையங்களும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வாக்கெடுப்பு மாவட்டங்களில் ஆட்கள் இடம்பெயர்ந்தில்லாததன் காரணமாக 31ஆம் இலக்க பிரதேசத்துக்கான வாக்கெடுப்பு நிலையமும் அதே பிரதேசங்களில் அமைக்கப்படும். ஆகவே அந்தப் பிரதேசங்களின் வாக்காளர்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், அந்தப் பிரதேசங்களின் அஞ்சல் அலுவலகங்கள் மூலமாக விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் கீழ்க்காணுமாறு அமைக்கப்படும்.

| பிரதேச செயலாளர் பிரிவு | உரித்தான வா.மா. | வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் இடங்கள் |
|---|---|---|
| மாந்தை கிழக்கு | 1–5 | இல. 1 முதல் 5 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களினுள்ளேயே அமைக்கப்படவுள்ளன. |
| துணுக்காய் | 6–11 | இல. 6 முதல் 11 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களினுள்ளேயே அமைக்கப்படவுள்ளன. |
| புதுக் குடியிருப்பு | 12–18 | இல. 12 முதல் 18 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வவுனியா, வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளது. |
| ஒட்டுசுட்டான் | 19–28 | இல 19 முதல் 24 வரையிலான வாக்கெடுப்பு மாட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வவுனியா. வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.<br>இல.25 முதல் 26 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களினுள்ளேயே அமைக்கப்படவுள்ளன.<br>இல. 27 முதல் 28 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது. |
| கரைதுறைப் பற்று | 29–50 | இல. 29 முதல் 30 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>31ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் மு/ கிரிஇப்பன்வெவ வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.<br>இல.32 முதல் 50 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன. |


தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை இராஜகிரிய.
2010 சனவரி மாதம் 11ஆம் திகதி.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

(ஜி/4179)

# முப்பது வருடங்கள் இல்லாத அபிவிருத்திகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

## ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டில் கடந்த 30 வருடங்கள் இல்லாத அபிவிருத்திகள், வடக்கின் வசந்தம் செயல் திட்டத்தின் கீழ் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மதவாச்சியிலிருந்து மன்னாருக்கான ரயில் போக்குவரத்துச் சேவையினை ஆரம்பிப்பதற்கான ஆரம்பக் கட்ட பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில், எமது நாடானது சகல சமூகங்களுக்கும் சொந்தமானது. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் என்ற பேதம் இங்கில்லை. அனைத்து மக்களும் எமது இலங்கை தேசத்தின் பிள்ளைகளே. இம் மக்களது அனைத்து விதமான தேவைகளையும் பெற்றுக் கொடுப்பதோடு, அவர்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சுதந்திரமும் உருவாகியுள்ளது.

சிறுபான்மை மக்கள் என்று எவருமில்லை. எல்லோரும் சமமானவர்கள் என்பதைநான் உறுதிப்படுத்தியுள்ளேன். முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்ற இடங்களில் இருக்கவேண்டியது எமது தாய் நாடடே. அதனை எவருக்கும் விட்டுக்கொடுக்கக்கூடாது.

மன்னார் மாவட்டம் பின்தங்கிய, அபிவிருத்தி குறைந்த, ஒதுக்கப்பட்ட பிரதேசமல்ல. அனைத்துத் துறைகளிலும், அபிவிருத்திகளிலும் முன்னேற்றம் அடைந்து வரும் பிரதேசம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அதேபோன்ற அபிவிருத்திகள் எதிர்காலத்தில் உங்களை வந்தடையவுள்ளது.

எனது நான்கு வருட ஆட்சிக்காலத்தில் நாட்டை மீட்டெடுத்தேன். இன்று நீங்கள் கடலுக்கு மீன்பிடிக்க சுதந்திரமாக போகலாம். விவசாயம் செய்யலாம். தொழில்களுக்குச் செல்லலாம். ஏன் அச்சமின்றி எங்கும் பயணிக்கலாம். இதை நான் உங்களுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளேன்.

நான் அன்று கடற்தொழில் அமைச்சராக இருந்தபோது, வங்காலையில் மீன்பிடி கூட்டுத்தாபனத்தை ஏற்படுத்திக் கொடுத்தேன். குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் விவசாயத்துறையினை மேம்படுத்தி வருகின்றோம். அதற்கான நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைப்பு செய்துள்ளோம்.

அதேபோன்று, விவசாயிகளைப் பாதுகாத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவோம். இப்பிரதேச மாணவ சமூகம் கல்வித் துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்பதே எனது அவாவாகும்.

மேலும் அரசாங்கத்தினதும் ஏனைய துறைகளினதும் உயர் பதவிகளை இப்பிரதேச மக்கள் வகிக்க வேண்டும். அதற்காகப் பிரார்த்தனை புரிகின்றேன். தொழிலற்ற, கல்வி கற்ற இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளேன். பட்டதாரிகள் தொழில்களைப் பெறவுள்ளனர்.

நான் ஒருபோதும் பொய் வாக்குறுதி அளித்ததில்லை. அளிக்கப் போவதுமில்லை. செய்வதைத்தான் சொல்வேன். சொல்வதைதான் செய்வேன்.

இந்தநாட்டில் இனவாதம் இருக்கமுடியாது. அது எமக்கு பெரும் ஆபத்தையும், அழிவையுமே ஏற்படுத்தும். தமிழ்பேசும் மக்கள் எமது மக்கள். நாம் அவர்களை நேசிக்கின்றோம். நீங்களும் என்னை நேசிக்கின்றீர்கள். இதுதான் யதார்த்தம். நீங்கள் கௌரவமாக வாழ்வதற்கான உத்தரவாதத்தை நான் தருகின்றேன். அதனைப் பாதுகாக்க வேண்டியது எனது கடமையும் பொறுப்புமாகும்.

எதிர்வரும் 26ஆம் திகதி உங்கள் வாக்குகளை எனக்கு அளிப்பீர்கள் என்று நம்புகின்றேன். வெற்றிலைச் சின்னம், வெற்றியின் சின்னம். வெற்றிலைச் சின்னம் உங்களின் சின்னம். 27 ஆம் திகதி மீண்டும் ஜனாதிபதியாக உங்களைச் சந்திக்க வருவேன் இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார். (2-6)

### ஐ.தே. முன்னிணி ஆட்சியில் பிரதமர் பதவி சரத் என் சில்வாவிற்கு

தற்போது முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கு ஜே.வி.பி. தீவிர முனைப்புக் காட்டி வருவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும் கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாதகமான பல தீர்மானங்களை வழங்கிய முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாலைவ பிரதமர் பதவியில் அமர்த்துவது குறித்த தீர்மானத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஆர்வம் காட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## ஜனாதிபதித் தேர்தல் போன்று பொதுத்தேர்தலிலும் இணைய ஐ.தே. முன்னணி, ஜே.வி.பி. தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் ஐக்கிய தேசிய முன்னணியும் ஜே.வி.பி.யும் இணைந்து போட்டியிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முன்னதாக ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பொதுத் தேர்தலில் இரண்டு கட்சிகளும் தனித்தே போட்டியிடுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்காகப் பொதுத் தேர்தலிலும் இணைந்து போட்டியிட ஐக்கிய தேசிய முன்னணியின் கட்சிகளும் ஜே.வி.பி.யும் தீர்மானித்துள்ளன.

இந்தத் தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா சுந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் ஜே.வி.பி.யின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு இடையில் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் மாவட்ட ரீதியில் பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வது என்ற இணக்கமும் இந்தக் கட்சிகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணியின் கீழ் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டால் ஜே.வி.பி. 40 ஆசனங்களைப் பெறக்கூடியதாக இருக்குமென அதன் செயலாளர் ரில்வின் சில்வா தமது ஆதரவாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த முனைப்புக்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட தலைவர்கள் மத்தியில் பெரிதாக வரவேற்பைப் பெறவில்லை எனக் கட்சியின் தரப்புக்கள் தெரிவித்துள்ளன. (2-6)

### திருமலையில் தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம்

திருகோணமலை சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 56 தமிழ் அரசியல் கைதிகளே தம்மை விடுதலை செய்யுமாறும் தமது விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் கோரி இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் 56 கைதிகளில் பலரின் உடல்நிலை தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (6-3)

### 2 இலட்சம் மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் நடைபெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் 3 இலட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் வரை தற்காலிகமாக வசித்து வருகின்றனர்.

இவர்களில் 1 இலட்சத்து 45 ஆயிரம் பேருக்கே வாக்களிக்கும் உரிமை கிடைத்துள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது குறித்து தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திடம் விசாரித்தபோது கடந்த 2008ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இவர்களில் பெரும்பாலானவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் அதனால் அவர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு அற்றுப் போயுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (2-6)

## வாக்களிக்க முடியாத நிலையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள்

### கபே அமைப்பின் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

வன்னி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கீர்த்திதென்னகோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது, மேற்படி பகுதிகளில் தற்போது மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் வெவ்வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் வெவ்வேறு இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளமையால் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு செய்யப்பட்ட இடமும், தற்போது மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள இடமும் வெவ்வேறாக உள்ளதால் தாங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள இடத்தில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

உதாரணமாக மாங்குளம், சின்ன முறிகண்டி, கனகராயன்குளம் ஆகிய பகுதிகளில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள சுமார் ஐம்பது குடும்பங்கள் தாங்கள் இருந்த அகதி முகாமிலேயே வாக்காளர் பதிவுகளை மேற்கொண்டனர்.

ஆனால் அவர்கள் தற்போது வெவ்வேறு இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறு மீள் குடியமர்த்தப்பட்டுள்ளவர்களுக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள இடத்திற்கே வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறுமே தவிர புதிதாக மீளக் குடியமர்த்தப்பட்ட இடங்களில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

அத்தோடு இவர்களுக்கு அடையாள அட்டை இல்லாமையும் பெரும் பிரச்சினையாகவுள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம். இதேவேளை இப்பகுதியில் போக்குவரத்துச் சேவையும் பின்தங்கிய நிலையில் உள்ளமையால் பெரும்பாலானோருக்கு வாக்களிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (2-6)


அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
THE REFUGEES REHABILITATION ORGANISATION

O/L எடுத்த மாணவர்களுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்

Computer Training Center

* Diploma in Office
* Diploma in Desktop Publishing
* Diploma in Type Setting

முயற்சி
தொழில்நுட்ப பயிற்சி நெறிகள்

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கணனி தட்டச்சு | - 06 மாதங்கள் |
| தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) | - 06 மாதங்கள் |
| தையல் பயிற்சி (Saree Work, painting & Saree blouse Cutting) | - 06 மாதங்கள் |

குறிப்பு:
* யாழ்ப்பாணம், இணுவில் ஆகிய இடங்களில் பயிற்சி நெறிகள் நடைபெறும். கணனிப் பயிற்சி நெறி இணுவில் பயிற்சி நிலையத்தில் மட்டும் நடைபெறும்.
* விண்ணப்பப் படிவங்களை சுயமாகத் தயாரித்து 20-01-2010 புதன்கிழமை காலை 10 மணிக்கு அந்தந்த நிலையங்களிற்கு சமூகம் அளிக்கவும்.
* வகுப்புக்கள் வார நாள், வார இறுதி நாட்கள் நடைபெறும்.
* பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

பயிற்சி நெறிகள் நடைபெறும் இடங்கள்

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
M.C. Leod வைத்தியசாலை,
இணுவில்.

(C-4180)

# 2010 புத்தாண்டு பலன்கள்



## தனுசு

### மூலம், பூராடம், உத்தராடம், முதலாம் பாதம் வரை

**திடீர் மாற்றங்கள் தித்திக்க வைக்கும்! எந்தக் காரியத்தையும் உடனடியாகச் செய்து முடிக்க வேண்டுமென்று சொல்லும் தனுசு ராசி நேயர்களே!**

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் உங்களுக்கு இந்தப் புத்தாண்டு எடுத்த காரியத்தை இனிதே முடிக்கும் ஆண்டாக அயைப் போகிறது. வருடத் தொடக்கத்தில் வரும் கிரகங்கள் உலா வரும் நிலையைப் பொறுத்தே, உங்கள் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் வரப்போகின்றன என்பதை அறிந்து கொள்ள இயலும்.

இந்த ஆண்டைப் பொறுத்தவரை ராசி நாதன் குரு சகாய ஸ்தானத்தில் சஞ்சரித்து அஷ்டமாதிபதி சந்திரனைப் பார்ப்பதால், உடல் நலம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். கடன் சுமை குறையும். கவலைகள் தீரும். மடமடவென்று காரியங்கள் நடைபெறத் தொடங்கும். தேக்க நிலை மாறி ஆக்க நிலை அமைய ஊக்கம் கொடுக்கும் நண்பர்கள் உறுதுணை புரிவர். பதவிகளும், பொறுப்புகளும் தானே வந்துசேரும்.

ஜூலை 21 முதல் செப்டெம்பர் 6 ஆம் திகதி வரை செவ்வாயும், சனியும் கன்னி ராசியில் இணையும் நேரத்தில் மட்டும் தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். சில ஏமாற்றங்களும் இனிய மாற்றங்களாக மாற வேண்டுமானால், வழிபாடுகள்தான் உங்களுக்குக் கைகொடுக்கும் எனவே, அங்காரகனையும், ஈஸ்வரனையும் யோகபலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் மங்களம் அனைத்தும் மனையில் வந்து சேரும். உங்கள் சுயஜாதகத்தில் உள்ள கட்டங்களையும் புத்தாண்டில் உள்ள கிரக நிலையில் கட்டங்களையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அவை இணைந்து செயற்பட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல் பணிந்து வணங்கி, பரிகாரங்கள் செய்து , யோக பலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்குச் சென்று வந்தால் வருமானமும் திருப்தி தரும். வருங்காலமும் சிறப்பாக அமையும்.

பெயரியல் முறையில், எண்கணித அடிப்படையில், குரு சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்ச நிலை பார்த்து, அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எதிர்காலமும் சிறப்பாக இருக்கும். இந்த 2010 இல் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்களை வழங்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**1-1-2010 முதல் 30-4-2010 வரை**

இக்காலம் உங்களுக்கு இனிய காலமாகவே அமையப் போகிறது. மகிழ்சிக்குரிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். பஞ்சம விரயாதிபதி நீச்சம் என்பதால் பிள்ளைகள் வழியில் செலவுகள் கூடும். குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கும், கல்யாண முயற்சிக்கும் வாய்ப்புகள் இருந்தால் அதை உபயோகப் படுத்திக் கொள்ளலாம். சொத்துக்களால் விரயங்கள் ஏற்பட்டாலும் அதை ஈடுகட்டப் புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். .

குருவின் பார்வை பலம் உங்கள் ராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிகிறது. அதன் பார்வை புனிதமான பார்வை என்பதால் வாழ்க்கைத் தேவை பூர்த்தியாகும். இலட்சியங்கள் நிறை வேறும். ஓய்வு எடுக்காமல் உழைத்த உழைப்பிற்கு நல்ல பலன் கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் வந்த பிரச்சினை அகலும். வாகன மாற்றமும் நினைத்தபடி செய்து கொள்வீர்கள். உறவினர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் உதாசீனப்படுத்தியவர்கள் எல்லாம் உங்களைத் தேடி வருவர். 10 ஆம் இடம் பலம் பெறுவதால் சராசரி மனிதராகப் பிறந்தவராக இருந்தாலும் சாதனையாளராக மாறும் வாய்ப்பு உருவாகும்.

இக்காலத்தில் சனி வக்கிர கதியில் இயங்குவது அவ்வளவு நல்லதல்ல கூட்டாளிகளிடம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. குறிப்பாக அரசுப் பதவியில் இருப்பவர்கள் புதிய நண்பர்களை நம்பி எதுவும் சொல்லி விட வேண்டாம். ஒரு சில நண்பர்கள் கூட நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்க மாட்டார்கள். காரிய வெற்றிக்கு கைகொடுத்து உதவுவது கடவுள் வழிபாடு மட்டும் தான். எனவே சனீஸ்வர வழிபாட்டில் கவனம் செலுத்தினால் சந்தோஷங்கள் வந்து வந்து சேரும். நடக்குமோ, நடக்காதோ என்று பயந்த காரியங்கள் கூட நடந்து விடும். மனக் குழப்பம் அகலும். எல்லை மீறிச் சென்ற சகோதரர்கள் இப்பொழுது ஒத்து வருவர்.

**1-5-2010 முதல் 31-8-2010 வரை**

இக்காலத்தில் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. ஏனென்றால் குரு வக்ரகதியில் இயங்குகிறார். மக்கள் செல்வாக்கு உங்களுக்கு அதிகமாக இருந்தாலும், மனக்குழப்பங்களும் அலை மோதும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையைக் குறையாமல் பார்த்துக்கொள்வது நல்லது. திடீர் ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் வந்துசேரலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால் ஆரோக்கியம் சீராக அமையும்.

குருவின் பார்வை மீனத்தில் இருந்தபடியே உங்கள் ராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே, அதன் பார்வை பலம் உங்களுக்கு கைகொடுத்து உதவும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட புதிய வாய்ப்புகள் வந்துசேரும். வரும் மாற்றங்களை உபியோகப்படுத்திக் கொள்வது நல்லது. சனி – குரு பார்வையின் சந்திப்பால் ஒவ்வொரு காரியமும் தாமதப்பட்டு நடந்தாலும் தக்க விதத்தில் நடைபெற்றுவிடும்.

குருவின் பார்வை அஷ்டமத்தில் பதிவதால் உடல்நலம் சீராகும். பாயில் படுத்தவர்கள் கூட பம்பரமாய் சுழலத் தொடங்குவர். நோயில் இருந்து விடுபட மாற்று மருத்துவரின் ஆலோசனை கை கொடுக்கும். பலநாட்களாகச் செய்த முயற்சி பலன் இல்லாமல் இருக்கிறதே என்று கவலைப்பட்டவர்கள் மகிழ்ச்சியடையும் விதத்தில் துரிதமாக நடைபெறும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும். வீடு மாற்றங்களை விரும்பியது போல் செய்ய இயலவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது மீண்டும் இடமாற்றம் செய்ய முயற்சிப்பர். அரசியல்வாதிகளுக்குப் பதவிகளில் மாற்றங்கள் வந்துசேரும்.

விரயஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் ஆன்மீகத்திற்கும், அடுத்தவர் நலனிற்கும் தொகையைச் செலவிட்டுக் கொண்டே இருப்பீர்கள். நூதனப் பொருள் சேர்க்கை அதிகரிக்கும். அதே சமயம் தொழில் வளர்ச்சியால் பண வரவும் வந்து கொண்டே இருக்கும். பயணங்கள் அதிகரிக்கும். தொலைதூரத்தில் இருந்து வரும் தகவல் உங்கள் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும். இடம், பூமி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கடன் சுமையையும் முழுமையாகக் குறைத்துக் கொள்ள எடுத்த முயற்சி வெற்றி தரும். குரு பார்வையைப் பலப்படுத்த தென்முகக் கடவுள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். திசைமாறிய தெட்சிணாமூர்த்தியை வழிபட்டு தித்திக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

**1-9-2010 முதல் 31-12-2010 வரை.**

இக்காலத்தில் குரு வக்ரகதியில் இயங்குகிறார். அதே சமயத்தில் தன, சகாய ஸ்தானங்களுக்கு அதிபதியான சனி வக்ர நிவர்த்தியாகி விட்டார். எனவே, பணப்புழக்கம் அதிகரிக்கும். பயணங்களாலும் பலன் கிடைக்கும். இனத்தார் பகை மாறும். எதிர்காலம் கருதி தீட்டிய திட்டம் வெற்றி பெறும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டுவந்து சேர்ப்பர்.

செப்டம்பர் மாதக் கடைசியில் செவ் வாயும், சுக்ரனும் இணைகிறார்கள். விலைக்கு வாங்கிய பூமியை விற்கும் சூழ் நிலை உருவாகலாம். விற்பனையால் இலாபம் கிடைக்கும். உடன் பிறப்புகளின் இல்லத் திருமணங்களுக்குக் கொடுத்து உதவி செய்வீர்கள். ஒக்டோபர் மாதத்தில் புதனும், சுக்ரனும், சூரியனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். எனவே பணப்புழக்கம் அதிகரிக்கும் மனக்குழப்பம் அகலும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான வாய்ப்பு உண்டு.

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகவும் . வளர்ச்சிகூடவும் அம்மனை வழிபட்டுவாருங்கள்.

தனுசு ராசியில் பிறந்த பெண்களுக்கு தாளராமாகச் செலவழிக்கும் விதத்தில் ஏராளமான பொருள் வரவு வரப்போகிறது. இந்த ஆண்டில் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மே, ஜூன் மாதத்தில் உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் வாய்ப்புகள் உருவாகலாம். பிள்ளைகள் வழியில் கொஞ்சம் கண்காணிப்பு தேவை. இல்லையேல், எல்லை மீறலாம். பிரச்சினைகள் வரும் பொழுதெல்லாம் அர்ச்சனைகள் செய்து வழிபட்டு வருவது நல்லது. ஜென்ம ராகுவை திருப்திப் படுத்த சர்ப்ப சாந்திகளைச் செய்து யோக பலம் பெற்ற நாளில் வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

---

# ஜனாதிபதி தமது குடும்ப நலனை மட்டுமே கருத்திற்கொண்டு செயற்படுகின்றார்

## தம்பர அமில தேரர்

(கொழும்பு)

ஜனாதிபதி . மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதி ஆவதற்கான எந்தவித இலட்சணங்களோ அல்லது வாய்ப்புக்களோ இருக்கவில்லை. அவற்றை கச்சிதமாக ஏற்படுத்தி அவரை வெற்றிபெறச் செய்தவர் கள் நாமே



என்று தேசப்பற்றுள்ள தேசிய நிலையத்தின் தலைவர் தம்பர அமில தேரர் தெரிவித்தார்.

அவர் இன்று நாட்டு மக்களைப் பற்றிச் சிந்திக்காமல் தமது குடும்ப நலனை மட்டுமே கருத்திற்கொண்டு செயற்படுகிறார் எனவும் அவர் கூறினார்.

அபேராம விகாரை கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

பயங்கரவாதிகளுக்கு அடிபணிந்து நாட்டைத் துண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போது அதற்கு எதிராக நாம் கடுமையாக போராடினோம். அந்த சந்தர்ப்பத்திலேயே மஹிந்த ராஜபக்ஷவை தேர்தலில் வெற்றிபெறச் செய்து ஜனாதிபதி ஆக்கினோம்.

அதுவரையிலும் ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்புக்கள் அவருக்கு இருக்கவில்லை. அப்போது நாம் கடுமையாக உழைத்து அவரை ஜனாதிபதிக் கதிரையில் அமர்த்தினோம். அதுவும் அவர் மிகவும் சொற்ப வாக்குகளிலேயே வெற்றி பெற்றார். அந்த வெற்றியின் மூலமாகவும் சிறந்த இராணுவத் தளபதியின் மூலமாகவும் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்ட முடிந்தது. எனவே , இல்லாத வெற்றியினை நாம் ஏற்படுத்திக்கொடுத்தோம்.

ஆனால் , தற்பொழுது அதனை பயன்படுத்திக்கொண்டு அவர் தம் குடும்ப உறுப்பினர்களை போஷித்தவராக தான்தோன்றித்தனமாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். இதனை தொடர்ந்து அனுமதிக்க முடியாது.

ஜனாதிபதியின் செயற்பாடுகள் தற்பொழுது நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் சாதகமாக இல்லாத போது அவரை அக்கதிரையில் இருந்து இழுத்து தள்ளி விட்டு உகந்த ஒருவரை அக் கதிரையில் நிறுத்த வேண்டியது எமது பொறுப்பாகும் என்றார்.


(6)

---

# ஏகாதிபத்தியவாதிகளை தோல்வியுறச் செய்யவேண்டும்

## வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)



இலங்கை வரலாற்றில் முதல் முறையாக இராணுவவாதிகள் , வன்முறையாளர்கள் , வலதுசாரிகள் மற்றும் தீவிர இனவாதிகள் ஆகியோர் ஒன்றிணைந்துள்ளார்கள் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செயலாளர் வாசுதேவ நாயணக்கார தெரிவித்துள்ளார்.

எனவே , இராணுவமயமான வன்முறை கலந்த வலதுசாரி சக்திகளைக் கட்டாயமாகத் தோல்வியுறச் செய்ய வேண்டும் என அவர் விடுத் துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் ஜனாதி பதித்தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பொதுமக்களின் வெற்றியை உறுதிப்படுத்துவது இன்றியமையாதது.

ஏகாதிபத்திய வாதிகளின். பிராந்திய தேவைகளுக்கு அடிபணியாத தலைவரான மஹிந்த ராஜபக்ஷ ,ஏகாதிபத்திய வாதிகளுக்குப் பேரும் தடையாவார்.

ஈராக்கில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க வழி மேற்கத்தைய ஏகாதிபத்திய வாதிகளின் பலாத்காரம் ஆப்கானிஸ்தான் வாழியே பாகிஸ்தான் ஊடாக தனது பயணத்தை தொடர்கிறது. இலங்கையிலும் அவர்களின் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக முயற்சிக்கிறார்கள்.

எனவே , மஹிந்த ராஜபக்ஷவின் தலை மைத்துவத்தை இரு கையேந்தி உயர்த்தி , ஏகாதிபத்தியவாதத் தலைமைக்கு மக்கள் சவால் விடுக்க வேண்டும் என்றும் வாசுதேவ நாணயக்கார தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

(6)

ஒரு மனிதனை தெரிந்து கொள்ள வேண்டுமா? அவனிடத்தில் அதிகாரத்தைக் கொடு.

–பல்கேரியா

வலம்புரி

## தருகின்ற சலுகைகள் தமிழருக்கல்ல அது தேர்தலில் வெற்றி கிடைப்பதற்கானது

'இதெல்லாம் அரசியலில் சகஜம் அப்பா' என்று கவுண்டமணி கூறுவது இலங்கைக்குத் தாராளமாகப் பொருந்தும். அந்தளவிற்கு 'அரசியல் திருகுதாளம்' பேயாட்டம் ஆடுகின்றது.

வன்னி யுத்தத்தில் அனைத்தையும் இழந்த குடும்பங்கள் தங்கள் துயரம் மறக்க முடியாமல் தவிக்கும் வேதனை ஒருபுறம். காணாமல் போனவர்களை தேடிக் களைத்து ஓடாய்த் தேய்ந்து போனவர்கள் இன்னொரு புறம்.

சுனாமி, நிஷா, சிக்குன்குனியா, டெங்கு என்ற கொடூரங்களில் இழப்புக்களைச் சந்தித்து உலகமே வெறுத்துப் போனவர் மறுபுறம் என தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

இந்த வேளையில் ஜனாதிபதித் தேர்தல், யுத்தம் நடத்தினோம்; பயங்கரவாதத்தை ஒழித்தோம் என்ற கூக்குரல்கள் தேர்தல் மேடைகளைப் பிய்க்கின்றன.

சமாதானம் கிடைத்ததா? தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு தரப்பட்டதா? எதுவுமேயில்லை.

தேர்தல் முடிந்த பின்னர் மீண்டும் பழைய நிலை அந்த நம்பிக்கையில் சில சலுகைகள்.

தேர்தல் திருவிழா முடிந்த பின்னர் மீண்டும் பாஸ் நடைமுறை, பயணத்தடை என்ற பட்டோலை வாசிக்கப்படும். என்செய்வது! எங்கள் தலைவிதி அதுவாயிற்று.

காலத்திற்கு காலம் தேர்தல்கள், வாக்குறுதிகள் என்ற மரபைப் பேணும் இலங்கையில் இனப்பிரச்சினை இன்னமும் தீராத நோயாக இருப்பது ஏன்? அரசியல்வாதிகளின் சுயநலமே அதற்கு அடிப்படையாக அமைகின்றது. இதற்கு பல சான்றுகளை முன்வைக்க முடியும்.

வன்னி யுத்தத்தின் முடிவில் அரச கட்டுப்பாட்டுக்குள் வந்து சேர்ந்த அப்பாவித் தமிழ் மக்கள் முட்கம்பி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டனர். இலட்சக்கணக்கான மக்களை ஒன்றாக அடைத்து வைத்ததால் ஏற்பட்ட மரணங்கள் ஏராளம். அவற்றை எல்லாம் போஸ்மோட்டம் செய்வதால் எந்தப்பயனும் இல்லை.

இருந்தும் முகாமில் அடைக்கப்பட்டுள்ள மக்களை விடுவிக்குமாறு ஐ.நா கேட்டது, அனைத்து உலகமும் கேட்டது. பதில் முடியாதென்பதாகவே இருந்தது.

முகா மில் மனிதப் பேரவலம் நடப்பதாக முறையிட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் பயங்கரவாதிகளின் நண்பர்கள் என முத்திரை குத்தப்பட்டன.

தமிழர் மீதான கோபமும், ஆத்திரமும் ஆளும் தரப்பிற்கு பன்மடங்கு அதிகரித்து பௌத்திரமாக்கிய நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் சிந்தனை ஏற்படுகின்றது.

ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பார் என்ற உண்மை தெரியாமல் தேர்தல் அறிவிக்கப்பட்டது. போர் வெற்றியில் சமபங்கு கேட்கும் உரிமையுடைய சரத் பொன்சேகா மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்க உறுதி கொண்டார்.

அதன் விளைவு முகாம்களில் அடைக்கப்பட்ட மக்கள் வீடுகளுக்கு திரும்ப முடியும். விரும்பினால் முகாமில் இருக்க முடியும், 24 மணிநேரமும் ஏ–9 ஆல் பயணிக்கலாம், உயர் பாதுகாப்பு வலயத்தில் கூடியிருக்கலாம்.

அப்பாடா... எத்தனை சலுகைகள், இவை அத்தனையும் தமிழருக்கானதல்ல. தேர்தல் வெற்றிக்கானது. தேர்தல் முடியவும் தந்த சலுகைகள் நிலைபேறு அடைய வேண்டுமாயின் தமிழ் மக்கள் புத்தியைப் பயன்படுத்த வேண்டும். அவ்வளவுதான்.

# தேர்தல் சட்டங்களை புறக்கணிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது சட்ட நடவடிக்கை

## தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை புறக்கணிக்கும் காவல்த்துறை உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத தேர்தல் பிரச்சார பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுமாறு தேர்தல் ஆணையாளர் காவல்த்துறையினருக்கு விடுக்கப்பட்ட உத்தரவு முழுமையாக செயற்படுத்தப்படவில்லை என்றும் இதற்கமைவாக கடிதங்கள், சுற்று நிருபங்கள் மற்றும் ஊடக அறிக்கைகளின் மூலம் ஆணையாளரினால் விடுக்கப்பட்ட உத்தரவுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அம்பாறை, கம்பஹா, களுத்துறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் சட்டவிரோதத் தேர்தல் பிரச்சார பதாகைகள் அகற்றப்படவில்லை. இவ்வாறு தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை காவல்த் துறையினர் தொடர்ந்தும் உதாசீனம்செய்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என தேர்தல் செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து கட்சித் தலைவர்களுடன் நாளை நடைபெறவுள்ள சந்திப்பின் போது தேர்தல் ஆணையாளர் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். எனினும், நீதிமன்ற நடவடிக்கைகளின் மூலம் சட்ட விரோதப் பதாகைகளை அகற்றும் நடவடிக்கை நடைமுறை சாத்தியப்பாடற்றதென பவ்ரல் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

தேர்தல்களுக்கு இன்னமும் சொற்ப காலமே எஞ்சியிருப்பதாகவும் இந்த நிலையில் வழக்குத் தொடர்ந்து அதன் ஊடாக தீர்ப்பைப் பெற்றுக்கொண்டு அதனை அமுல்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுவதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோகன கெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். (2–6)

## விசா அனுமதிப்பத்திரம் தொடர்பான முறைகேடுகள்

(கொழும்பு)

இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் 80 உலக நாடுகளில் இருந்து வரும் மக்களுக்கு கட்டுநாயக்க வானூர்தி தளத்தில் 30 நாட்களுக்கான விசா அனுமதி பத்திரம் வழங்கப்படும் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான அனுமதிப் பத்திரங்களை பயன்படுத்தி போதைப்பொருள் கடத்தல்காரர்கள், விலை மாதர்கள், சட்டவிரோத பயணிகள் மற்றும் குடியேறிகளும் வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அவ்வாறான நபர்களை கைது செய்து நாடு கடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பாகிஸ்தானில் இருந்து அகதிகள் அந்தஸ்து கோரி 500 பேர் இவ்வாறான சுற்றுலா விசா அனுமதிப்பத்திரம் பெற்று இலங்கை வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து குடும்பத்துடன் வரும் பாகிஸ்தானியர்களுக்கு மட்டுமே இனி விசா அனுமதி வழங்கப்படும் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சட்டவிரோத குடியேறிகளின் அடையாள ஆவணங்கள் ஐக்கிய நாடுகளின் அகதிக்கான தூதுவராலயத்தினரால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் இந்த ஆய்வுகள் இடம்பெறும் வரை அவர்கள் சட்டவிரோத குடியேறி கள் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பர் எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பி.வி.அபயஜோன் தெரிவித்துள்ளார். (6–4)

## கோல்டன் கீ வைப்பாளர்களுக்கு மேலும் ஒரு பகுதி கொடுப்பனவு

கோல்டன் கீ நிதி நிறுவனத்தில் நிதிவைப்பு செய்தவர்களுக்கு மேலும் ஒரு பகுதி கொடுப்பனவுகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் ஒவ்வொரு வைப்பாளர்களும் குறைந் தது ஒரு இலட்சம் ரூபாவை மீளப் பெறுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோல்டன் கீ நிறுவனத்தில் இரண்டாயிரத்து 506 பேர் வைப்பு செய்துள்ளதாகத் தெரிவிக்கும் இலங்கை மத்திய வங்கி ஒவ்வொரு வைப்பாளர்களும் ரூ. 10 இலட்சம் முதல் 25 இலட்சம் வரை வைப்புச் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிதி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடியை அடுத்து உச்ச நீதிமன்றம் பட்டயக் கணக்காளர் மூவரைக் கொண்ட குழுவொன்றை நியமித்து அதன் நடவடிக்கைகளை கண்காணிக்கப் பணித்திருந்தது.

இந்நிலையில் தற்போது வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் வைப்பாளர்களுக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (6–4)

## வெளிநாடுகளிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் மருந்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் வெளிநாடுகளில் இருந்து அவற்றை துரிதமாக இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கொண்ட குழுவொன்று இந்தியா சென்று அவற்றைக் கொள்வனவு செய்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசாங்க வைத்தியசாலைகளிலுள்ள மருந்துகளின் பற்றாக்குறை குறித்து ஆராய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

40 வீதமான அத்தியாவசிய மருந்துகளுக்கும் 10 வீதமான ஊசி மருந்துகளுக்கும் பற்றாக்குறை நிலவுவதாகவும் இலங்கைக்கு மருந்துகளை விநியோகிக்கும் ஐந்து நிறுவனங்கள் தமது ஏற்றுமதி நடவடிக்கைகளை நிறுத்தியமையே இந்தப் பற்றாக்குறைக்கான காரணம் எனவும் குறிப்பிடப்படுகிறது. (6–4)

## மகேஸ்வரன் ஞாபகார்த்த மணிமண்டபம் திறப்பு விழா

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மகேஸ்வரன் ஞாபகார்த்தமான மகேஸ்வரன் மணிமண்டபத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானக்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சிவஸ்ரீ சம்பு மகேஸ்வரக் குருக்கள் நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

மணிமண்டப நினைவுக் கல்லினை ஐ.தே.கட்சியின் தவிசாளர் டி. எம். சுவாமிநாதனும் அமரர் மகேஸ்வரனின் திருவுருவப்படத்தினை ஐ.தே.க. பிரதித் தலைவர் கருஜெயசூரியா, வும் திரை நீக்கம் செய்தனர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களால் அமரர் மகேஸ்வரன் ஞாபகார்த்த உரை நிகழ்த்தப்பட்டது. ஐ.தே.க. பிரதித் தலைவர் கருஜெயசூரிய, தவிசாளர் டி.எம். சுவாமிநாதன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து திருமதி வசந்தா வைத்தியநாதனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஈழத்துச் சிதம்பர திருத்தல யாத்திரை, முருகப்பெருமான் தோத்திரமாலை ஆகிய நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டது. (2–246)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### கல்வியும் சமுதாயமும்



புதிய இந்தியா ஒரு புறம் சொல்கிறது : "மேலை நாடுகள் செய்வது நிச்சயம் சரியாகத்தான் இருக்கும். இல்லாவிட்டால் அவை எப்படி இவ்வளவு பெருமை உடையவையாக ஆகியிருக்க முடியும்?"


மறுபுறம் பழைய இந்தியா சொல்கிறது. "மின்னலின் ஒளி மிகவும் நன்றாகத்தான் பிரகாசிக்கம் ஆனால் அது ஒரு கணம்தான். குழந்தைகளே! உங்கள் கண்களை அது கூடச் செய்வதைக் கவனியுங்கள். எச்சரிக்கையாக இருங்கள் !"

மேலை நாடுகளிலுள்ள சமுதாய வாழ்க்கை முறை கணீரென்று சிரிப்பதைப் போன்றதாகும். ஆனால் அதன் அடியில் அழுகையும் புலம்பலும் மறைந்திருக்கின்றன. ஆனால் அதன் முடிவும் தேம்பியழுவதாகவே அமையப்போகிறது. மேற்புறத்திலே மட்டுமே வேடிக்கையும் விளையாட்டும் அங்கு காணப்படுகின்றன. ஆனால் உண்மையில் அளவில்லாத துயரமே அதில் நிறைந்திருக்கிறது.

# எமது கட்சியில் எவ்வித பிளவும் இல்லை

## ஜனாதிபதி மகிந்தவுக்கே பூரண ஆதரவு

### அசாத் மௌலானா



(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் எவ்வித பிளவுகளும் ஏற்படவில்லை எனக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கு தமது கட்சி பூரண ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் இந்தத் தீர்மானம் தொடர்பில் எவ்வித முரண்பாடுகளும் நிலவவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளதுடன் இத்தீர்மானம் காரணமாக கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தபோதிலும் பல உறுப்பினர்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிப்பதனையே விரும்புவதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குள் ஏற்பட்ட பிளவினைப் போன்றே தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியிலும் பிளவுகள் ஏற்படக் கூடிய சாத்தியம் இருப்பதாக குறித்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் அழுத்தங்கள் காரணமாகவே பிள்ளையான் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(2-6)

# தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற தீர்மானமற்ற நிலையில் 15 சதவீத மக்கள்

### கருத்துக் கணிப்பில் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தமது ஆதரவினை வழங்குவதா அல்லது எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு தமது ஆதரவினை வழங்குவதா என்ற தீர்மானமற்ற நிலையில் 15 சதவீதமான மக்கள் இருப்பதாக மக்கள் கருத்துக் கணிப்பின்போது நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

அரச மற்றும் எதிர்க்கட்சிகளினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நாடளாவிய ரீதியிலான மக்கள் கருத்துக் கணிப்பின்போது இது தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சார்பில் இந்தியாவிலுள்ள பிரபல தகவல் நிறுவனமொன்று நாடு முழுவதும் கருத்துக் கணிப்புக்களை மேற்கொண்டுள்ளது. இதேவேளை எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் சார்பில் முன்னணி வகிக்கும் பொருளாதார நிபுணர் ஒருவர் நாடளாவிய ரீதியில் தனது கருத்துக் கணிப்புக்களை நடத்தியிருக்கிறார். இதனடிப்படையிலேயே 15 சதவீதமான வாக்காளர்கள் தாம் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை என்று நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தவிர பல மக்கள் கருத்துக் கணிப்பு நிறுவனங்கள் வெவ்வேறாக நடத்தியுள்ள ஆய்வுகளின் பிரகாரம் இது தெரியவந்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனவே ஜனாதிபதித் தேர்தலுக்காக எஞ்சியுள்ள ஏனைய நாட்களில் இரு பிரதான வேட்பாளர்களும் இதுவரை தீர்மானமற்ற நிலையில் உள்ள 15 சதவீத வாக்குகளையும் தமது பக்கம் ஈர்ப்பதற்கான தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (2-6)

# ஜனாதிபதித் தேர்தலின் பின்பு

## பிரதமர் பதவி யாருக்குக்கிடைக்கும்? ஆளும்கட்சி உறுப்பினர்களிடையே முரண்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பிரதமர் பதவி யாருக்கு வழங்கப்படும் என்பதில் ஆளும் கட்சி சிரேஸ்ட உறுப்பினர்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் பதவியை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் ஜனாதிபதி தெளிவான கருத்து எதனையும் வெளியிடாத காரணத்தினால் சில சிரேஸ்ட அமைச்சர்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இந்த முறுகல் நிலை காரணமாக சில அமைச்சர்கள் முழு வீச்சில் தேர்தல் பிரசாரப் பணிகளை முன்னெடுக்கத் தவறியுள்ளதாகவும் குறித்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த டி.எம். ஜயரட்ன, நிமால் சிறிபால டி சில்வா மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பிரதமர் பதவியை எதிர்பார்த்திருப்பதாகவும் ஆனால் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் வழங்காது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து கட்சி தாவியோருக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும் இந்த சிரேஸ்ட உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது.

(2-6)

# நாம் உருவாக்கிய தேசிய அலையுடன் வந்து இணைபவர்களை வரவேற்கிறோம்

### மனோ கணேசன்



(கொழும்பு)

தேசிய ரீதியாக நாம் உருவாக்கியுள்ள அலையுடன் வந்து இணைபவர்களை நாம் வரவேற்கின்றோம் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிரணியில் இணைவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க. மட்டக்களப்பு அமைப்பாளர் சசிதரன், ஆர். யோகராஜன் ஆகியோர் கலந்துகொண்ட ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

எதிர்க்கட்சிகள் இணைந்து ஐக்கிய தேசிய முன்னணியை உருவாக்கிய வேளையிலும் பின்னர் டிசெம்பர் 18ஆம் திகதி கண்டியில் சரத் பொன்சேகாவின் முதல் பிரசாரக் கூட்டத்தை நாங்கள் நடத்திய பொழுதும் இந்நாட்டில் ஆட்சி மாற்றத்திற்கான அலை அடிக்கவில்லை. ஆனால் இன்று எமது அயராத உழைப்பின் காரணமாக வெற்றி அலை ஓங்கி வீச ஆரம்பித்து விட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இங்கு சொன்னதுபோல இந்நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள் மத்தியிலேயே எனது செயற்பாடு மாற்றத்தை கொண்டுவரத் தொடங்கியுள்ளது. அந்தக் கருத்து உண்மையானது என்பது நாடு முழுக்க வாழும் தமிழ் மக்களுக்குத் தெரியும்.

இந்நாட்டின் வடக்கு-கிழக்கு மலையகம் மற்றும் மேற்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியிலேயே நாம் ஆட்சி மாற்றத்திற்கான அலையை ஏற்படுத்தியுள்ளோம். இந்நிலையில் இன்று எமது எதிரணி கூட்டணியுடன் வந்த இணைந்துகொள்ளும் அனைவரையும் நாம் வரவேற்கின்றோம். ஆட்சி மாற்றம் காலத்தின் கட்டாயம் என்பது இன்று அனைவராலும் உணரப்படுவதன் அடையாளங்களாகவே எம்முடன் வந்து இணைந்து கொண்டுள்ள அனைவரது நிலைப்பாடுகளையும் நாம் பார்க்கவேண்டும் என்றார்.

# தேர்தல் திணைக்களத்தின் பரிந்துரைகளினை கவனத்தில் கொள்ளாவிடில் கடும் நடவடிக்கை

### ஜயம்பதி ஹெட்டியாராச்சி


(கொழும்பு)

தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்படும் பரிந்துரைகளைக் கவனத்தில் கொள்ளாது ஒருதலைப்பட்சமாகச் செயற்பட முயற்சித்தால் அதற்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரச ஊடகங்களை கண்காணிப்பதற்காகத் தேர்தல் ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி ஜயம்பதி ஹெட்டியாராட்சி தெரிவித்துள்ளார்.

தற்போது அரச ஊடகங்களில் ஒளி, ஒலி பரப்படும் நிகழ்ச்சிகள், விசேட நிகழ்ச்சிகளைத் தான் காண்கணித்து வருவதாகவும் தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை மீறி இந்த நிறுவனங்கள் செயற்பட முடியாது எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

நாட்டின் அரசியல் சாசனத்தின்படி குறிப்பிட்ட நிறுவனங்கள் தேர்தல் காலத்தில் தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளைப் பின் பற்றவேண்டும். அரச ஊடகங்கள் இந்த உத்தரவுகளைப் பின்பற்றத் தவறினால் அது அரசியல் சாசனத்தை மீறும் செயலாகும்.

மேலும் சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தலை நடத்த அரச ஊடகங்கள் தடையாக இருக்குமாயின் அவற்றைத் தடுக்க உச்ச நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார். (2-6)




# தேர்தல் பிரசார குறுஞ் செய்திகளினால் திறைசேரிக்கு 22 மில்லியன் ரூபா நட்டம்

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்தின் ஒரு கட்டமாக இலங்கையிலுள்ள 13.5 மில்லியன் கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களுக்கு எவ்வித கட்டணங்களும் இன்றி புத்தாண்டு குறுஞ்செய்தி வாழ்த்துச் செய்திகளை அனுப்புமாறு ஜனாதிபதி தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டதனால் திறைசேரிக்கு 22.5 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு தமது சட்ட திட்டங்களை மீறியதுடன் பொதுச் சொத்துக்களை விரயம் செய்த வகையில் தேர்தல் சட்டங்களையும் மீறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களுக்கும் இது நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கையடக்கத் தொலைபேசி குறுஞ்செய்தி ஒன்றுக்காக பாவனையாளர்களிடம் இருந்து ஒரு ரூபா 67 சதம் அறவிடப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. (2-6)

### ஆளுங் கட்சி தாக்குதலிலிருந்து

# தற்காத்துக் கொள்வதற்கு பதுங்குகுழிக்குள் தேர்தல் அலுவலகம்


(கொழும்பு)

ஆளுங் கட்சியினரால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களில் இருந்து தம்மை தற்காத்துக் கொள்வதற்காக பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பென்சேகாவின் சிலாபம் தேர்தல் தொகுதியின் பிரசார அலுவலகம் பதுங்குகுழியொன்றில் அமைக்கப்பட்டுள்ளது.




தொடர்ந்தும் தமது கட்சியின் ஆதரவாளர்களும் அலுவலகங்களும் தாக்கப்பட்டால், ஆதரவாளர்களையும் அலுவலகத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காக மணல்மூடைகள் கொண்டு தேர்தல் பிரசார அலுவலகத்தை அமைத்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் சல்காதுவ தொகுதியின் அமைப்பாளர் சட்டத்தரணி நந்த முத்தெட்டுகம தெரிவித்துள்ளார்.

(ந-5)





யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு மங்கள இசை அணிவகுப்புடன் அழைத்துச் செல்லப்படுவதையும் ஆலயத் திற்குள் பூசைவழிபாடுகளில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.


யாழ். ஆயர் இல்லத்தில் சந்திப்பை மேற்கொள்வதையும் துரையப்பா விளையாட்டரங்கில் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட அரசியல் பிரமுகர்களுடன் அரங்கில் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட சமய,சமூக பிரதிநிதிகளையும் மற்றும் அரச அதிகாரிகளையும் படங்களில் காண லாம்.






**துரையப்பா விளையாட்டரங்கில் கூடியிருந்த மக்கள் மத்தியில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ கையசைப்பதையும் படங்களில் காணலாம்.**








மகேஸ்வரன் மண்டப திறப்புவிழாவில் மண்டபத்தினை சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் திறந்து வைப்பதையும் மகேஸ்வரன் மண்டப நினைவுக்கல்லை திறந்து வைத்து மகேஸ்வரன் திருவுருவபடத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் உபதலை வர் கரு ஜெயசூரிய மலர் மாலை அணிவிப்பதையும் மகேஸ்வரனின் புதல்வர் சுடர் ஏற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.





விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை யின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல் திரு மாவளவன் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினரும் அஞ்சலி செலுத்து வதையும் வேலுப்பிள்ளை யின் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்வதையும் படங்களில் காணலாம்.

## பகிரங்க விவாதம்...

அமைச்சர் ஆகிய அதி உயர் பொறுப் புக்களை வகித்த இந்த இரண்டு பேருமே ஆயுத விவகாரம் தொடர்பில் பேசுவதற்கு தகுதியானவர் கள் என ஜே.வி.பி.கட்சியின் நாடாளு மன்றக் குழுத் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.

தமக்கோ, சவால்களை விடுக் கும் ஆளும் கட்சி உறுப்பினர் களுக் கோ இந்த ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி தெளிவாக தெரிந் திருக்க நியாயமில்லை என அவர் குறிப்பிட்டார்.

எனவே, ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் விவாத மொன்றை நடத்தக் கூடிய மிகத் தகுதியானவர்கள் பாதுகாப்பு அமைச் சரான ஜனாதிபதியும், முன்னாள் இராணுவத் தளபதி யான ஜெனரல் சரத் பொன் சேகா வுமே என அவர் சுட்டிக்காட்டியுள் ளார். (ச-5)

## வேலுப்பிள்ளை...

விடுதலைச் சிறுத்தைகள் அமைப் பின் தலைவர் தொல்.திருமாவள வன், பழ.நெடுமாறன் சார்பில் பிரபு மற்றும் சந்திரசேகரன் ஆகி யோர் தமிழகத்திலிருந்து வந்து கலந்து கொண்டு அஞ்சலி உரை யை ஆற்றி உள்ளனர்.

அத்துடன் மறுமலர்ச்சித் திரா விட முன்னேற்றக்கழகத் தலை வர் வைகோ மற்றும் தமிழர் பாது காப்பு இயக்கத் தலைவர் பழ.நெடு மாறன் ஆகியோர் தொலை பேசியில் அஞ்சலி உரையாற்றினர். (ச-5)

## சர்வதேச...

பதிலளிக்கவும் ஐக்கிய நாடு கள் அமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்க வும் இலங்கை ஜனாதிபதி தயாராக இருப்பதாகவும் இதற்காக இலங் கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்குமாறு பாலித கோஹன சில சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதி களி டம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த திட்டத்திற்கு அமைய அவ் வாறான உத்தரவு பிறப்பிக்கப்பட் டால் எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனா திபதி வெளிநாடு செல்ல திட்ட மிட் டுள்ளார் எனவும் அவர் கூறியுள் ளார். (ச-5)

# ஜனாதிபதி மகிந்த நேற்று மட்டக்களப்புக்கு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்து தேர்தல் பிரசார நடவடிக் கைகளை மேற்கொண்டார். நேற்று மாலை மட்டக்களப்பு நகரில் நடை பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழிலும், சிங் களத்திலும் உரையாற்றினார்.

தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதி கலந்து கொண்டு உரையாற்றுகை யில், கடந்த முப்பது வருடகாலமாக இந்த நாட்டில நிலவிய கொடூர யுத தம் முடிபுக்கு கொண்டு வரப்பட்டு அனைத்து மக்களும் நிம்மதியாக வாழும்சூழ்நிலைஏற்பட்டுள்ளதுஎன்றார்.

மட்டக்களப்பில் விவசாயம், மீன் பிடித் துறைகளில் நவீன தொழில் நுட்ப முறைகளை அறிமுகம் செய்து மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றப் படும். அத்துடன் புதிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என் றும் கூறினார். இக்கூட்டத்தில் அமைச் சர் முரளிதரன், கிழக்குமாகாண முதல மைச்சர் சிவனேசதுரை சந்திரகாந் தன். அமைச்சர் அமீர்அலி ஆகியோ ரும் உரையாற்றினார்கள். (ச-7)

## மேலும் நான்கு கைதிகள்...

மயங்கிய நிலையில் சிகிச்சை பெற்று வந்த கைதிகள் மீண்டும் சிறைச்சா லைக்கு அனுப்பப்பட்ட நிலையில் மீதமாக உண்ணாவிரதம் நடத்தி வரு பவர்கள் உடல் நிலை பலவீனம் அடைந்து வருவதாக கூறப் படுகிறது.

சின்னத்தம்பி மோகன், கனேஷ மூர்த்தி ஜெகரூபன், புவனேந்திரன் சதீஸ்வரன், குமாரசிங்கம் நிஷா கரன் ஆகியோரே யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ச-30)

## சொந்த இடங்களை...

மக்கள் மத்தியில் உறுதியளித் தார்.

இந்நிலையில் ஜனாதிபதி சாத கமான பதிலை வழங்குவார் என நம்பி தெல்லிப்ப ழையில் மக்கள் குழுமியிருந்தனர்.

காலை 8 மணிக்கு அவர்கள் கூடியிருந்ததாக தெரிவிக்கப்பட் டது. எனினும் உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஜனாதிபதி எந்த அறிவித்த லையும்விடுக்காதநிலையில்அதனை அறிந்து கொள்ளாத மக்கள் மாலை 4 மணிவரை அங்கு காத்திருந்தனர்.

யாழ். துரையப்பா விளையாட் டரங்கில் ஜனாதிபதியின் நிகழ்வில் கலந்து கொண்ட அப்பகுதி அரச அதிகாரிகள் கூட அங்கு கூடியி ருந்த மக்களுக்கு தகவல் கொடுக்கவில் லை என குற்றம் சாட்டப்பட்டது.

இதேவேளை உயர் பாதுகாப்பு வலயத்தி லுள்ள தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமை நாடாளுமன்ற உறுப்பி னர்கள் சிலரும் ஏமாற்றம் அடைந்த தாக கூறப்பட்டது. (ச-5)

## ஜனாதிபதியின் அறிவிப்பு...

யாழ்.குடாநாட்டிற்கு வருகை தரும் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ, உயர்பாதுகாப்பு வல யங்களை அகற்றல், கைது செய்யப்பட் டுள்ள கைதிகள்ள விடுவித்தல் போன்ற அறிவிப்புக்களை வெளியிடுவார் என எதிர் பார்க்கப்பட்டது.

எனினும் யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துரையப்பா விளை யாட்டரங்கில் காத்திருந்த மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனங்களை நீக்குவது குறித்தோ, காணாமல் போன, கைது செய்யப்பட்டவர்கள் நிலை, அரசியல் தீர்வு பற்றி எதுவித அறிவிப்புக்களையும் விடுக்கவில் லை.

மாறாக தற்போது அரசினால் நடை முறைப்படுத்தப்பட்டுள்ள பாது காப்பு தளர்வுகள் குறித்தும் வடக் கின் வசந்தம் அபிவி ருத்தி திட்டம் குறித்துமே உரையாற்றினார்.

அவரின் சாதகமான அறிவிப்பு வரும் என கொளுத்தும் வெயிலில் கால் கடுக்கக் காத்திருந்த மக்கள் இத னால் ஏமாற்றமடைந்து வீடுகளுக் குத் திரும்பினர் இதேவேளை யாழ்ப் பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதி பதிமகிந்தராஜபக்ஷவைபலாலிவிமான நிலையத்தில் வைத்து சமூக சேவை கள் மற்றும்சமூகநலத்துறை அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா வரவேற்றார்.

அதன்பின் நாக விகாரைக்கு விஜ யம் செய்த ஜனாதிபதி அங்கு விசேட வழிபாட்டில் ஈடுபட்டார். தொடர்ந்து யாழ். மாநகர சபை முன்றலிலிருந்து மங்கள வாத்திய இசை அணிவகுப் புடன் ஜனாதிபதி நல்லூருக்கு அழைத் துச் செல்லப்பட்டு அங்கு விசேட வழி பாட்டில் ஈடுபட்ட பின்னர் ஆயர் இல்லத் துக்குச் சென்று யாழ். ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்ட கையை சந்தித்தார்.

தொடர்ந்து யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்குச் சென்ற ஜனாதிபதி அங்கு கூடியிருந்த மக் கள் மத்தியில் உரையாற் றினார். யாழ். வந்த ஜனாதிபதியுடன் ஐ. தே.கவிலிருந்து விலகிய எஸ்.பி.திஸா நாயக்க, ஜனாதிபதியின் ஆலோச கர் ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோரும் யாழ்.வந்திருந்தனர். (ச-5)

## தமிழ் பேசும் மக்களுக்கான...

உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறிய தாவது,

உங்களை நேரில் வந்து சந் திக்க வேண்டும் என நீண்ட காலத் திற்கு முன்பே நான் நினைத்திருந் தேன். இப்போது அந்தப் பலன் கிடைத் துள்ளது. இன்று இந்த நாட்டில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மற் றும் மலையக மக்கள் அனைவரும் அச்சமின்றி வாழ்கிறார்கள் என் பதை நான் உங்களுக்கு உறுதிப டக் கூறுகின்றேன்.

தென்னிலங்கையில் இருக் கின்ற சுதந்திரம் வடக்கு, கிழக்கு உட் பட நாட்டின் அனைத்து மக்களுக் கும் இருக்க வேண்டும். வடக்கில் 3 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அக திகளாக இருந்தனர். நாம் அந்த மக் களை மெல்ல மெல்ல மீள்குடிய மர்த்த ஆரம்பித்து இன்று வேகமாக நடைபெற்று வருகிறது.

விவசாயம், மீன்பிடி, பாட்டாளி மக்களின் வாழ்க்கையை மேம் படுத் தும் திட்டங்கள் முன்னெடுக்கப்படு கின்றது.

உங்கள் பிள்ளைகளின் எதிர் காலம் முக்கியமானது. அப்பிள்ளை களின் பாதுகாப்பை நாம் உறுதிப் படுத்துவோம். அதற்காக யாழ்ப்பா ணத்தின் கல்வித் துறையில் கூடிய அக்கறை செலுத்துகின்றோம்.

இந்தப் பகுதியில் வாழ்கின்ற விவசாயிகளுக்கு நன்மையளிக் கும் வகையில் தென்பகுதியில் உள்ள ஒரு நதியில் இருந்து நீர்ப்பா சனத்தை ஏற்படுத்தப் போகின்றோம் என தனது தாய் மொழியான சிங் களத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தமிழ் மொழி யில் உரை யாற்றிய ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷதெரிவிக்கையில்,

உங்கள் முன் தமிழில் பேசுவதில் சந் தோஷப்படு கின்றேன். நீங்கள் காட்டும் அன்பு,நேசம் எனக்கு சந் தோஷமாக இருக்கிறது.

இன்று நீங்கள் எல்லோரும் சந்தோஷ மாக இருக்க முடியும். உங்களுடைய ஆல யங்களுக்குச் செல்ல முடியும், கடலுக்குச் செல்ல முடியும், சந்தைக்குச் செல்ல முடி யும், எங்கும் பயணங்கள் போக லாம்.

நான் யாழ்.மாநகர சபை, வவு னியா நகரசபை தேர்தல்களை நடத்தினேன். மிக விரைவில் வட க்கு மாகாண சபைத் தேர்தலை யும் பிரதேச சபைத் தேர்தல்களையும் நடத்தவுள்ளேன்.

இதன் மூலம் மக்கள் தமது பிர தேச பிரதி நிதிகளைச் தெரிவு செய்ய முடியும். ஜன நாயகம் பாதுகாக்கப் படவேண்டியது அவசியம்.

இடம்பெயர்ந்த மக்கள் அனை வரும் மீள்குடியமர்த்தப்படுவார்கள். இனி அகதிகள் யுகம் என்ற ஒன்று இல்லை.

எமது மக்களுக்கு எதுவித பாதிப் புக்களும் ஏற்படக்கூடாது. யாரும் எங்கும் எப் போதும் போகலாம். எது வித கட்டுப்பாடுகளும் இருக்க மாட் டாது.

மக்களைப் பாதுகாக்க வேண்டி யது எனது பொறுப்பு. அது எனது கடமை. விவசாயம் செய்பவர்களுக்கு நீர்பாசன வசதிகள் செய்து கொடுக் கப்படவேண்டும். இன்னும் வசதி கள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண் டும்.

யாழ்தேவி புகைவண்டி முன்பு தின மும் யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்றது. அப்போது நானும் சகோ தர தமிழ் நண்பர்களுடன் சந்தோஷ மாக வந்து சென்றேன்.

மீண்டும் யாழ்தேவி புகைவண்டி சேவை யாழ்ப்பாணத்திற்கு சேவை யினை ஆரம்பிக்க வேண்டும். அந்த நல்ல நாள் வெகு தூரத்தில் இல்லை.

நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள். ஏ-9 வீதி திறக்கப் பட்டது வட பகுதிமக்களுக்கு சொர்க்க வாசல் போன்றது ஆசியாவிலேயே சிறந்த நூல் நிலையமாக யாழ். பொது நூலகம் இருந்தது. மிகவும் அரிதான நூல்கள் அங்கு இருந்தன. ஐக்கிய தேசியக்கட்சியினர் அதனை எரித் துள்ளனர்.

தமிழ் பேசும் மக்களுக்கு நியாய மான, நீதியான அரசியல் தீர்வு வழங் கப்படும். தென்பகுதி மக்களுக்கு சொர்க்கமாக இருப்பது அது வடக்கு மக்களுக்கு நரகமாக இருக்க முடி யாது.

புதிதாக மேல் சபை ஆரம்பிக் கப்படும் வடக்கின் வசந்தம் திட்டத் தில் பல அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பாதைகள், வசதிகள் நாளுக்கு நாள் அதி கரிக்கப்படுகின்றது. உங்களின் பிள்ளைகள் தான் உங்களின் பெரிய சொத்து.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறி யியல் பீடம், கிளிநொச்சியில் விவசா யபீ டம் ஆரம்பிக்கப்படும்.

ஆங்கில மொழி கட்டாயம் படிக்க வேண்டும் உங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் இந்தநாட்டில் முக்கிய பதவிகள் வகிக்க வேண்டும்.

நாகலிங்கம், எதிர்வீரசிங்கம் என இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் முன்பு விளையாட்டுத் துறையில் பிரகாசித்தனர்.

இலங்கை அண்மையில் ஆசிய கூடைப்பந்தாட்டம் போட்டியில் சம் பியனாகியது. இதில் பங்கேற்ற யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த உயரமான வீராங்கனையான தர்ஷினி சிவலிங் கமும் அடங்குவர்.

சர்வதேச விளையாட்டு அரங்கு ஒன்று யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்க வுள்ளோம். இன, மத பேதமின்றி ஒரு தாய் மக்களாக நாம் வாழ வேண் டும்.

சேர். பொன் இராமநாதன், சேர். பொன். அருணாசலம் போன்றவர் கள் உருவாக வேண்டும். நான் உங் கள் நண்பன், தோழன், சகோதரன்.

உங்களை நான் நம்புகின்றேன். நீங்கள் என்னை நம்புங்கள். வெற் றியின் சின்னம் வெற்றிலையே. வெற் றிலையே வெற்றியின் சின்னம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உரையில் தெரிவித்தார். (ச-5)

# மரண அறிவித்தல்

## சந்தியாப்பிள்ளை இராசையா



கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட சந்தியாப்பிள்ளை இராசையா 10.01. 2010 (ஞாயிற்றுக்கிழமை) நேற்று தனது 101ஆவது வயதில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை, மரிய முத்து ஆகியோரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற மரியமுத்துவின் அன்புக் கணவரும், அக்கினேஸ் மங் களம், அன்ரன் செல்வராசா (மொடோன் புத்தகசாலை), மேரி பிலோமினா (ஜேர்மனி), அருட்சகோதரி யோச பின் [(தி.கு) (அதிபர்-இரம்பைக்குளம் மகளிர் ம.வி வவுனியா)], மேரி எம்மா ஆகியோரின் அன்புத் தந்தை யும் பற்றிக் துரைராசா, மாகிறட் மெலனி, பற்றிக் யோகராஜன் (ஜேர்மனி), மனோகரன் ஆகியோரின் மாமனாரும்,

ஜோய் (அமெரிக்கா), பேட்டி (பிரான்ஸ்), டிலானி (U.K), யோயல், டனி, பவன்ராஜ், பால்ராஜ் (ஜேர்மனி), டானியல் (ஜேர்மனி), சோபினி ஜேம்ஸ்கரன், ஏசாந் தியா, றூவின், அருட்சகோதரி திரேஸ் (அன்புப் பணியாளர்) ஆகியோரின் பாசமிகு பேரனும்

அருட்தந்தை மங்களராசா, அருட்சகோதரிகள் யோலண்ட் [(தி.கு) மாகாணத்தலைவி)], மாறியூடித் (அ.கா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 12.01.2010 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தூய பரலோக அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சீரிப்பல்லி சேமக்காலையில் நல் லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
அன்ரன் செல்வராசா (மகன்)
(மொடோன் ஸ்டோர்ஸ்-நெல்லியடி)

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(C-4184)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.